உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41 ] துந்துபி ஆண்டு ஆவணித்திங்கள் 10-9-82 [ இதழ் 10



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41 || 10–9–82 || இதழ் 10

## உட்பொருள்



உ

குருபாதம்

### ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[☆]—

உன்னைச்சிங் காரித்
துனதழகு பாராமல்
என்னைச்சிங் காரித்
திடர்ப்பட்டேன்—பொன்னை
அரிவையரை யேநினையும்
அன்பிலேற் குன்தாள்
தருவையோ சொக்கநாதா.

—சொக்கநாத வெண்பா. 92.


ஆசிரியர் :-
வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
**சி. அருணைவடிவேல் முதலியார்**

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 23
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 25
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 250

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 41 | துந்துபி - ஆவணி - 10—9—82 | இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## சைவ வளர்ச்சியில் ஒரு புதிய சகாப்தம்

### ஒளி பிறந்தது :

சைவ - சமயம், மற்றும் சைவசித்தாந்தம் ஆகிய இவற்றின் வளர்ச்சியில், ஒரு புதிய சகாப்தத்திற்குத் தருமையாதீனத்தில் விதையூன்றப்பட்டிருக்கும் நல்ல செய்தியினை வாசகர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். தேனினும் இனிய திருவாசகப் பாமாலை கிடைப்பதற்கு அடிகோலிய அதே ஆவணிமூலத் திருநாளில், தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அளப்பரிய கருணைத்திறம் "சைவ - சித்தாந்த ஆராய்ச்சி மையம்" தருமையில் மலரத் துணையாயிற்று. தமிழகத்தில், சைவ - சித்தாந்த வளர்ச்சியில் அரும்பணி ஆற்றிவரும் அறிஞர்கள் பலரும் பங்கேற்க 29—8—82 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி அளவில், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் குத்துவிளக்கேற்றி வைக்க வைதிக சம்பிரதாய பூஜைகளோடு, மங்களகரமாக ஆய்வு மையம் பணிதொடங்கிற்று.

## மூன்றாண்டுத் திட்டம் :

'சித்தாந்தக் கலாநிதி' டாக்டர் திரு. ப. அருணசலம் எம். ஏ., பி. எச்டி., அவர்களை நெறியாளராகக் கொண்ட இவ்வாய்வு மையம் காலத்தின் தேவை கருதி, சைவநெறி பற்றிய மேல்நிலை ஆய்வுக்குப்பயன்படும் வண்ணம் முதல் கட்டமாக ஒரு மூன்று ஆண்டுச் செயல்திட்டத்தை வரையறுத்துள்ளது. ஆண்டுக்கு ஒன்ருக மூன்று அரிய நூல்களை ஆராய்ச்சி நோக்கில் வெளிக் கொணர்வது மையத்தின் முதற்கட்டப் பணியாகத் திகழும். அவை முறையே 1. சைவ - நூல் ஆய்வடங்கல். 2. சைவ - சித்தாந்தக் குறியீட்டுச் சொல் அகராதி. 3. சைவக் கலைக் களஞ்சியம் என்பன ஆகும். இவற்ேறாடு உலகில் வாழும் அன்பர்கள் பலரையும் சைவநெறியில் ஈர்க்க அஞ்சல்வழி - தொடர்கல்வி நிலையம் ஒன்றையும் உடனடியாகச்செயற்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஆய்வுக்குப்பயன்படும் வகையில் தனி நூலகம் ஒன்றையும் உடனடியாக நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இவைதொடக்கப்பணிகள் பிறவகைப் பணிகள்பற்றியும், இவ்வாய்வுமையத்தைத் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தோடு இணைத்து, மாணுக்கர்களுக்கு சைவ சித்தாந்தத்தில் எம். பிலில்., மற்றும் பி. எச்டி., பட்டம் வழங் கவும் உரியவர்களோடு கலந்து ஆலோசிக்கப்பட்டுவருவது மேலும் மகிழ்ச்சியளிக்கிறது.

## சைவநூல் ஆய்வடங்கல் :

எந்த ஒரு துறையில் ஆய்வு மேற்கொள்ள வேண்டுமா யினும், உரிய கருவி நூல்களின் துணை இன்றியமையாதது. மேலும், ஒவ்வொரு துறையிலும் இதுவரை மேற்கொள்ளப் பட்டிருக்கும் ஆய்வுகளைப் பற்றிய தகவல்களை அறியவும் வேண்டியுள்ளது. இவ்வகையில் சைவ - சித்தாந்தச் செந்நெறி குறித்த மேல்நிலை ஆய்வுக்குக் கருவிநூலாக, இவ்வாய்வுமையம் முதலில் 'சைவ - நூல் ஆய்வடங்கல்' என்ற தகவல் நூலைத் தொகுத்து வழங்கவுள்ளது. தொல்காப்பியர் காலம்முதல் இன்று வரை சைவஞ் சார்ந்து எழுந்த இலக்கியங்கள், இலக்கிய உரைகள், உரைநடை நூல்கள், கட்டுரைகள், ஆராய்ச்சி வெளி யீடுகள் போன்ற அச்சேறிய நூல்கள் பற்றிய விபரங்களை முறையாக இவ்வாய்வடங்கல் வழங்கும். ஒவ்வொரு நூல் பற்றியும் முறையாக (அ) ஆசிரியர்பெயர் (ஆ) காலம் (இ) நூல் அமைப்பு (கவிதை, உரை, கட்டுரை போன்ற வடிவம்) (ஈ) பதிப்பு விபரங்கள் (அச்சிட்டோர்-ஆண்டு முதலியவிபரம்) (உ) சைவம் மற்றும் சைவ - சித்தாந்த ஆய்வுக்குக் குறிப்பிட்ட

அந்த நூல் வழங்கும் கருத்துக்கொடை ; மற்றும் வேண்டிய இன்றியமையாத தகவல்களை இவ்வாய்வடங்கல் திரட்டி வழங்கும். ஒரே நூல் பலமுறை அச்சிடப்பட்டிருக்குமானல் அவை பற்றிய தகவல்களும், முன்னைய பதிப்பில் இல்லாத புதிய செய்திகளின் விபரங்களும் நிரலாகத் தொகுத்து வழங்கப் படும். இவ்வகை நூல் சமய – தத்துவ ஆராய்ச்சிக்கு அருந் துணையாகும் என்பது ஒருதலை.

## சித்தாந்தச் சொல் அகராதி :

இரண்டாவதாக, சைவ – சித்தாந்தக் குறியீட்டுச் சொல் அகராதி வெளிக்கொணர்வதை இம்மையம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சைவ சித்தாந்தம் உயரிய தமிழ்ச் செந்நெறி. இந்நெறி பற்றிய நூல்கள், மற்றும் குறியீடுகள் வடமொழியில் நிறைவாகத் தமிழ்ச் சான்ருேர்களால் வடிக்கப் பெற்றன. சைவ சித்தாந்தத்தில் வழங்கப்பெறும் குறியீட்டுச் சொற்கள் பலவும் நடைமுறை வழக்கில் இடம் பெருதன. எனவே இத்தகு சொற் களின் பொருளையும், உள்ளீட்டையும் தெளிவுபெற அறிவிக்கும் தனி அகராதி ஒன்றும், மேல்நிலை ஆய்வுக்குப் பெரிதும் வேண்டப் படும் .இவ்வகையில் சைவ–சித்தாந்தச் சாத்திரங்கள் இவற்றின் அரிய உரைகள் இவற்றில் காணப்படும் குறியீட்டுச் சொற்களை முறையாகத் தொகுத்து, உரிய சொற்பொருள் விளக்கம் தந்து அகர வரிசைப் படுத்தி வெளியிடும் பணியினைத் தக்க அறிஞர் களின் துணையோடு இம்மையம் மேற்கொள்ள விருக்கிறது.

## சைவக்கலைக் களஞ்சியம் :

தமிழில் சைவ – கலைக்களஞ்சியம் ஒன்று வெளியிடப்பெற வேண்டுமென்ற சைவப் பேரன்பர்கள் பலரது ஆர்வத்தை நிறைவு செய்வதை இவ்வாய்வு மையம் மூன்ருவது பணியாக மேற்கொண்டுள்ளது. ( தமிழில் வெளிவந்துள்ள கலைக்களஞ்சி யங்களில் சைவ நெறி பற்றிய போதிய தகவல்கள் நிறைவாகத் தரப் பெறவில்லை. ) சைவம் பற்றிய பல்வேறு தகவல்களை முறையாகத் தொகுத்துத் தக்க அறிஞர்கள் வாயிலாக உரிய விளக்கக் கட்டுரைகளை எழுதச் செய்து, வேண்டிய படங்களை இணைத்துச் சில தொகுதிகளாகச் சைவக் கலைக்களஞ்சியம் வெளிவர விருக்கிறது. சைவம் – சைவ சித்தாந்தம், இறையவர், திருக்கோயில்கள், நூல்கள், நூலாசிரியர்கள், சமய நிலையங்கள், விழாக்கள், கலைகள், சம்பிரதாயங்கள் போன்ற எந்த ஒரு துறை பற்றிய தகவல்களையும் தரத்தக்க விரிவுடையதாகக் இக் கலை களஞ்சியம் அமையும்.

## அஞ்சல் வழி சைவக் கல்வி :

பிறப்பாலும், உணர்வாலும் சைவச் செந்நெறி நிற்போர் உலகில் பலர். ஆயினும் இவர்களில் பலருக்கு முறையான சமய அறிமுகம் இல்லை. சமயநூல் பயிற்சிக்கு வாய்ப்புக்கிடைத்திலது வாழ்வாலும், சூழ்நிலைகளாலும் சைவம்பற்றி முறையான அறிவு பெற இயலாது வருந்தும் ஆர்வலர்களுக்கு இவ்வாய்வு மையம் அஞ்சல் வழி, தொடர் கல்வி வழங்க முன் வந்துள்ளது. சமயம் பற்றிய இதனைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தொடங்கி நடத்த முடிவு செய்துள்ளது. பல்வேறு இன்றியமையாத தகவல்களை முறையாகத் தொகுத்து – வகைப்படுத்தி – பாடத்திட்ட அடிப் படையில் கட்டுரைகளாக அச்சிட்டு, வினு விடைத்தாள் இணைத்து உலகில் பல இடங்களில் வாழும் அன்பர்களுக்கு அஞ்சல் வழி அனுப்பிச் சமய உணர்வும் அறிவும் வழங்க முறையாக இம்மையம் திட்டமிட்டு வருகிறது. குறித்த சில ஆண்டுகளில் சைவ சமயம் பற்றிய அறிவை வழங்கி தேர்வுகள் நிகழ்த்திச் சான்றிதழ் வழங்க எண்ணமிடப்பட்டு வருகிறது.

## உள்ளதைக் கொண்டு நல்லது செய்வோம் :

மேற்கண்ட முயற்சிகள்யாவும் ஒரு பல்கலைகழகம் மேற் கொள்ள வேண்டிய அரிய பணிகள் என்பதை வாசகர்கள் அறிவர். ஏற்கனவே உள்ள பல்கலைக் கழகங்களில் சமய ஆய்வுக்குக்குறிப்பாகச் சைவசித்தாந்தத்திற்கு அதிக இடமில்லை. தமிழ்ப் பல்கலைக் கழகத்திலோ சமய ஆய்வு நிகழ்த்தலாமா கூடாதா என்ற ஐயப்பாட்டிலேயே இருப்பதாகத்தெரியவரு கிறது. சைவ சமயத்திற்கு என ஒரு பல்கலைக் கழகத்தைத் தமிழ்நாட்டுச் சைவத் திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து தொடங்க அறநிலைய இலாகாமூலம் அரசு முயற்சிக்கலாம்.

இலவசத் திருமணத் திட்டம், சத்துணவுத் திட்டம் போன்றவற்றிற்குச் செலவிடுவதை நிறுத்தி அந்நிதியை இவ்வகையில் திருப்ப அரசு உதவிசெய்யலாம். இக்கருத்தை அரசுக்கு அறிவித்து ஆவனசெய்யமுயற்சிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமய வளர்ச்சிக்காகப் பக்தர்கள் வழங்கும் நிதிகள் சமய வளர்ச்சிக்கே பயன்படுத்தப்பெறவேண்டும். அப்போது தான் மக்கட்குச் சமயத் தத்துவ உண்மைகளை விளக்கும் பள்ளிகள், ஆய்வுமையங்கள், பல்கலைக் கழகங்கள் தோன்ற வாய்ப்பு ஏற்படும். இது அரசிற்கும் பெருமை சேர்க்கும்; அறநிலையங்கட்கும் வலிமை சேர்க்கும். அரசு சிந்தித்துச்

செயல்படுத்தச் சிறிது காலதாமதமாகலாம். எனவே இவற்றை மனத்தில்கொண்டு தருமையாதீனம், இருக்கும் வசதிகளுக்கு ஏற்ப இந்த ஆய்வு மையத்தை இப்போது தொடங்கியுள்ளது.

**துணைநிற்க வாருங்கள் :**

அரிய பெரிய பணிகளை மேற்கொள்ளும் ஒரு நிறுவனத்திற்கு மக்கள் ஆதரவு, குறிப்பாக அறிஞர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. மேற்குறித்த ஆய்வுகளை மையம் சிறப்பாக நிறைவேற்ற உரிய உதவிகளை, வேண்டியதகவல்களை, உயரிய ஆலோசனைகளை வழங்கவேண்டிய கடமையும், பொறுப்பும் அனைவருக்கும் உரியது. ஆய்வடங்கல், அகராதி, கலைக்களஞ்சியம் போன்ற பெரியமுயற்சிகளுக்குத் தேவையானவிபரங்களை சைவ - சமயநாட்டமுடைய அனைவரும் தெரிவித்து உதவ ஞானசம்பந்தம் அன்புடன் வேண்டுகின்றது. தீபம் ஏற்றி வைக்கப்பட்டுவிட்டது. இதனை எண்ணெய் ஊற்றி, அணையாது பாதுகாத்து, தூண்டி ஒளிபெறச் செய்யவேண்டுவது அனைவரது கடமையுமாகும்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

**Dharmapuram Adhinam**

**Sri Amirthakadeswaraswami Devasthanam, Tirukkadaiyur.**

I and my wife had the blessings of the Presiding Deity and we are fortunate to have the Dharsan.

(S-d) P. Venkata Subbaiah,
Minister of State for Home
and Parliamentary Affairs
Govt. of India.

21—8—82

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

கும்பகோணத்தில் நடைபெற்ற

**சைவ வேளாளர் மாநாட்டில் வழங்கியருளிய**

# ஆசியுரை

17—5—1982

"செய்யநின் கமலபாதம் சேருமா தேவர்தேவே,
மையணி கண்டத்தானே, மான்மறி மழுவொன்றேந்தும்
சைவனே, சாலஞானம் கற்றறிவிலாதநாயேன்
ஐயனே, ஆலவாயி லப்பனே, அருள்செயாயே"

**கண்மணியிற் சிறந்த நன்மணி**

குடந்தைமாநகரத்தில் சைவ வேளாளர்கள் இன்று ஒரு புரட்சியைச் செய்துள்ளார்கள். அது திருவருள் புரட்சியாகவே அமைந்திருக்கிறது. இதற்கு உறுதுணையாயிருந்து இயக்கிய வர்கள் நமதுகண்மணியிற் சிறந்த நன்மணியாகிய காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் ஆவார்கள். இத்தகைய ஓர் அருஞ்செயலைச் செய்த நம் சிஷ்யரைப் பாராட்டுகின்றோம்; அதில் மகிழ்ச்சியும் அடைகின்றோம். ஒரு பிள்ளையின் வளர்ச்சியைக் கண்டு தந்தை பூரிப்படைவது போன்றது இது! சைவ வேளாளர் சங்கம் ஏறத்தாழ நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பெற்று மெதுவாக நடைபோட்டு வந்து இப்பொழுது கொஞ்சம் வேகமாக நடைபோட ஆரம்பித்துள்ளது. இது சங்கத்தின் வளர்ச்சிக்கோர் நல்ல அறிகுறியாகும். இதுபோன்ற நல்ல செயல்களில் மக்களை ஈடுபடுத்தி அவர்களின் உள்ளத்தில் நற்பண்பை விதைத்து, குருஉபதேசம்

பெறுகின்ற பக்குவ நிலைக்குத் தயார்செய்து அழைத்துவரவே சிஷ்யர்கள் இருக்கிறார்கள். அப்படி இருத்தல் அவசியமான தாகும். நமது ஆதீனத்தின் நான்காவது குருமூர்த்திகளுக்கு ஒரு குமரகுருபரர் அமைந்ததுபோல, இராமகிருஷ்ணபரமஹம்சருக்கு ஒரு விவேகானந்தர் கிடைத்ததுபோல, இப்பொழுது நம் ஆதீனத்திற்கு காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் கிடைத்துள்ளார்.

## வேளாளர் யார்?

வேளாளர் என்பார் யார்? என்று முதலில் சிந்தித்தல் அவசியமாகும். பரமேசுவரனின் முடியில் கங்காதேவி இருக்கிறார். அவரை இறைவன் பார்த்தருளினார். அவரிடத்திலிருந்து ஓர் ஆண்மகவு தோன்றியது. விஷ்ணுவின் பாதத்திலும் ஒரு கங்கை இருக்கிறார். அவரை இறைவன் நோக்கியருள அவரிடத்திருந்து ஒரு பெண்மகவு தோன்றியது தேவர்கள் இவ்விருவர்க்கும் திருமணம் முடித்துவைத்தனர். இவர்களிடத்திலிருந்து தோன்றியதுதான் வேளாளர்குலம். இத்திருமண காலத்தில் உடனிருந்தவர்கள் 8000ம் மகரிஷிகள் ஆவார்கள். அவர்களின் பாரம்பரியத்தில் 8000ம் கோத்திரங்கள் தோன்றின. கோத்திரம் எனும் சொல் வழிவழியாக வந்தவர்கள் என்ற பொருளுடையது. அதனால்தான் இன்றும்,

"கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு
பாத்திரம் அறிந்து பிச்சை இடு"

என்று கூறிவருகின்றனர். இவ்விபரம் அபிதான சிந்தாமணியில் காணப்பெறுவது.

'வேளாளர்' எனும் சொல்லுக்கு வரலாற்று இலக்கியவகையில் பிறிதொருபொருள் காணப்படுகிறது. 'வேள்' எனும் சொல் விருப்பத்தை உண்டுபண்ணுபவர் என்னும் பொருளுடையது. வேள், குரிசில், நம்பி போன்ற சொற்கள் இன்றும் ஆண்களில் சிறந்தவர்களுக்குப் பட்டமாக வழங்கப்படுவதைக் காணலாம். முருகவேள், காமவேள், தமிழவேள் போன்ற சொற்களையும் இதற்கு ஆதாரமாகக் கூறலாம்.

விருப்பத்தை உண்டுபண்ணுபவர்கள் என்றால் எல்லோருக்கும் உபகாரியாக இருந்து மக்கள் விரும்பும் செயல்களை மேற்கொள்ளுகிற ஒழுக்கம் உடையவர்கள் என்பது விளக்கமாகும், அதனால் வேள் + ஆளர் எனும்பொழுது விருப்பத்தை

ஆள்பவர்கள்; விருப்பத்தால் ஆள்பவர்கள் என்று பொருள் கூறலாம். இவர்கள் சிறந்த உபகாரியாக இருப்பவர்கள் என்ப தற்குச் சான்ருகத் 'திரிகடுகம்' எனும் நூலின் ஆசிரியர் நல்லாதனுர் ஒரு பாடல் கூறுகின்ருர்.

> " தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
> வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்
> கோளாளன் என்பான் மறவாதான்; இம்மூவர்
> கேள்ஆக வாழ்தல் இனிது "

எனும் இப்பாடலில் வேளாளன் என்பான் பிறவிருந்தினர்கள் இருக்கும்பொழுது தான் தனித்து உண்ணும் பழக்கம் இல்லா தவன் எனும் பொருளில் " வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான் " என்று கூறுகின்ருர். இக்கருத்தை வள்ளுவரும்,

> " தாளாற்றித் தந்தபொருள் எல்லாம் தக்கார்க்கு
> வேளாண்மை செய்தல் பொருட்டு "

என்று கூறுகின்ருர். முயற்சியால் ஈட்டப்படும் பொருள் தக்கவர்கட்கு உதவுதல் பொருட்டேயாகும் என்பது இதன் பொருளாகும். எனவே 'வேளாண்மை' என்று கூறுவது உபகாரத்தன்மையை ஆளுதல் என்றபொருளில் வருவதைக் காணுகிறோம், மேலும்,

> "வேளாளர் என்பவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும்
> தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே"

என்னும் ஞானசம்பந்தர்தேவாரத்தாலும் இவர்கள் உபகாரிகள் என்பது புலனுகும். அதாவது உதவிபுரிவோர். எனவே ஈத்துவக்கும் இயல்பினர் என்பது தெளிவாகும்.

## இணைக்கும் சைவம்

இத்தகைய வேளாளர்கள் பல பிரிவுடையவர்களாக வாழ்ந்துவருகின்ருர்கள். தொண்டைமண்டல வேளாளர்கள், சோழமண்டல வேளாளர்கள், பாண்டிமண்டல வேளாளர்கள், தொண்டை மண்டல துளுவவேளாளர்கள், கொங்குமண்டல வேளாளர்கள்எனும்பாகுபாட்டுடன்வாழ்கின்றனர். தொண்டை மண்டல வேளாளர்கள் தொண்டைமண்டல முதன்மையார் என்றும் சோழமண்டல வேளாளர்கள் சோழிய வேளாளர்கள் என்றும் வாழ்ந்து வருகின்றனர். இப்பிரிவுகள் வந்தமைக்குரிய காரணம் அவரவர்கள் வாழ்ந்த நாட்டுப் பகுதியைப்பொருத்து

அமைந்த அமைப்பு ஆகும். அவர்கள் செய்த செயலும், பேசும் மொழியும், வழிபடும் கடவுளும், மேற்கொள்ளும் புழக்க வழக்கமும் ஒன்ருக இருந்தாலும் சார்ந்து வாழும் நாட்டின் சூழலால் வேறு வேறு பெயர்களைக் கொண்டு வாழ்ந்துவரலாயினர். அப்படிப் பிரிந்து பல்லாண்டுக்காலம் வாழ்ந்தபோது சில நடைமுறை பழக்க வழக்கங்களும், ஒழுக்க நெறிகளும் மாறுபடலாயின. இவைபற்றி உறவுமுறையும் மாறு படலாயின.

இவர்கள் அனைவரும் இணையவும், இவ்ர்களுக்குள் உள்ள வேறுபாடு மறையவும் உரிய ஒரேவழி, இவர்கள் கடைப்பிடித் தொழுகும் சமயத்தின் பெயரால் இவர்களை ஒன்றுபடுத்துவது தான் என்பதை இந்தநேரத்தில் சிந்தித்தல் பயனுடையதாகும். ‘சைவம்’ என்ற ஓர் அமைப்பில் திரண்டு ஒன்றுபடுவது இவர் களுக்கும் இவர்கள் சார்ந்துவாழும் நாட்டிற்கும் நன்மைபயப்ப தாகும். சிறுகுட்டைகளாக இருப்பவை குளமாக இணைவதும், குளங்கள் பலசேர்ந்து ஏரியாக இணைவதும் ஏரியாக இருப்பது பெரிய ஏரியாக-கடலாக அமைவதும்போல சிறு சிறு பிரிவினர் களாக இருப்பதை மறந்து ஒரு பெருங்குழுவில் ஒன்று திரள்வது அனைவருக்கும் நன்மைதரும் என்பதில் ஐயமில்லை. இவ் விரிந்த மனப்போக்கைத்தான் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்றது புறநானூறும்.

## உடல் வளர்ச்சிக் கொள்கை

அங்ஙனம் ஒன்றுபடும் ‘சைவர்’ என்பவர்கள் கடைப்பிடித் தொழுக வேண்டிய கொள்கைகளை இனிச் சிந்திப்போம். அவற்றை உடல்வளர்ச்சிக்குரியவை, உயிர்வளர்ச்சிக்குரியவை என இரண்டாகப் பிரித்துக் காண்போம்.

சைவர்கள் என்பவர்கள் உடல்வளர்ச்சிக்குரிய கொள்கை களாக அதாவது ஒழுக்கங்களாக மூன்றினைக் கடைப்பிடித்தல் அவசியமாகும். 1. புலால் உண்ணமை 2. மது அருந்தாமை. 3. புகை பிடிக்காமை. இவற்றினைக் கடைப்பிடித்து ஒழுகுதல் சைவன்ஒவ்வொருவனுக்கும்தலையாயகடமையாகும். முதற்கண் உள்ள புலால் உண்ணமை இன்று பல சைவர்களிடத்தில் இலைமறை காய்மறையாகத் தலைக்காட்டுவதால் அதை முளையி லேயே களையவேண்டும் என்பதற்காகவே இக்கொள்கையினை வற்புறுத்தவேண்டியது அவசியமாகின்றது. இன்றும் உணவு விடுதியில்கூட புலாலை நீக்கியுள்ள உணவினைச் ‘சைவச் சாப்பாடு’ என்றுகூறுவதனைக்காணுகின்றோம். ஆதலின் ‘சைவன்’

என்ருல் புலால் உண்ணமாட்டான் என்பது வழக்கத்தில்வந்த ஒன்ருகும். "அன்பேசிவம்" என்ற அஹிம்சையை அடிப் படையாகக்கொண்டது சைவம். அக்கொள்கையைக் கடைப் பிடிப்பவரே சைவர். இவன் பிறருக்கோ பிற உயிருக்கோ தீங்கு செய்யாது வாழவேண்டும், வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். திருவள்ளுவர் இப்புலால்உண்ணலைக் கண்டிக்கிருர்.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

என்கின்ருர். புலால்உண்ணுவோனின் உள்ளம்நல்லனவற்றைச் சிந்திக்காது என்பதனையும் திருவள்ளுவர்,

"படை கொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்"

என்ற குறளால் கூறுகின்ருர். எனவே புலால் உண்ணுமையைச் சைவர்கள் சைவ வேளாளர்கள் தீவிரமாகக் கடைப்பிடித்தல் அவசியமாகும்.

அடுத்துக் குடி, குடியைக் கெடுக்கும் என்பதை அனைவரும் அறிவர். ஆதலின் அப்பழக்கமும் அறவே வராமல் பார்த்துக் கொள்ளுதல் நலம் பயக்கும்.

புகை பிடித்தல் இன்று சைவர்கள் மத்தியில் கூடச் சர்வ சாதாரணமானபழக்கமாகப் படர்ந்துவருகிறது. தன்உடலுக்குக் கெடுதி பயக்கும் என்று தெரிந்தும்கூடப் படித்தவர்களும் அறிஞர்களும் சிறந்த வல்லுநர்களும் போதையில் மயங்கி இப்புகை பிடிக்கும் பழக்கத்தை ஒரு நாகரிகமாகக் கருதிப் பயன்படுத்துகிருர்கள். இச்செயல் அறவே அகற்றத்தக்கது.

திருநீறுபூசுவது உடலுக்கும் உயிர்க்கும்நன்மைதரும் என்று அறிந்தும் பூசுவோரைப் பார்த்துக் கேலி பேசும் இவ்வுலகம், புகைபிடித்தல் போன்ற பழக்கங்கள் உடலுக்கும், உயிருக்கும் கேடுபயக்கும்என்று அறிந்தும் குடிக்கிறவனைப்பார்த்து ஒன்றும் சொல்லாமல் இருப்பது விந்தையினும் விந்தையாக உள்ளது. ஆனுல் உலகவிமரிசனத்திற்கு முழுமையாக ஆட்பட்டுவிடாமல் தம்மனம் நினைக்கும் நற்காரியங்களைச் செய்கின்ருேம் என்று சிந்தித்து உறுதியுடன் செயலாற்றும் திறன் சைவர்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டத்தக்கதாகும்.

இங்ஙனம் உடல் வளர்ச்சிக்குப் பயன்படும் இம்மூன்று ஒழுக்கங்களுடன் 'திருநீறு அணிதல்' என்ற ஒன்றும் உடல் வளர்ச்சிக்கு நன்மை பயப்பது என்பதனைப் புரிந்துகொண்டு பின்பற்றுதல் நலம் பயக்கும். திருநீறு அணிதல் உயிர் வளர்ச்சிக்குப் பயன் தருவதோடல்லாது உடல் வளர்ச்சிக்கும் பயனளிப்பது என்பது ஆன்றோர் கண்ட உண்மையாகும்.

## உயிர் வளர்ச்சிக் கொள்கை

இனி உயிர் வளர்ச்சிக்குரிய ஒழுக்கங்கள் சிலவற்றைச் சிந்திப்போம். அவையும் மூன்று பிரிவுபடும். 1. உருத்திராக்கம் அணிந்து கொள்ளுதல் 2 திருநீறு அணிதல் 3. இளமையிலேயே பஞ்சாட்சர உபதேசம் பெறுதல் என்பனவாகும்.

ஒவ்வொரு பெற்றோர்களும் தம்பிள்ளைகளை 7 வயது முதல் 9 வயதிற்குள் அல்லது 11வயதிற்குள், தாங்கள் விரும்பிப் போற்றும் குருநாதரிடம் அழைத்துச்சென்று பஞ்சாட்சர உபதேசம் பெறஏற்பாடு செய்தல் இன்றியமையாததாகும். பிள்ளைகள் எப்பொழுதும் சிறுவயதில் நல்லவர்களாகத் தான் இருக்கிறார்கள். அவர்கள் நாம் பூசிப்பதைப் பார்த்துப் பூஜை அறையில் சென்று பூஜை செய்வது போன்ற செயல்களைச் செய்து மகிழ்கிறார்கள். ஆனால் பெற்றோர்களில் சிலர் இதனைப்பார்த்து, "நீ ஏன்? இப்பொழுதே இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகின்றாய்?" என்று கண்டிக்க ஆரம்பித்தவுடன் அப்பிள்ளைகளின் மனம் மாறி விடுகிறது. ஆதலின் பெற்றோர்கள் பிள்ளைகளை இளமையிலேயே இதுபோன்ற நற் செயல்களில் ஈடுபடுத்துதல் மிகமிக முக்கியமானதாகும்.

காலையில் எழுந்தவுடன் நீராடுதல்; உடனே நெற்றியில் நீறு அணிதல்; தனக்குத் தெரிந்த இறைபக்திப் பாடல்களைப் பாடுதல்போன்ற பழக்கங்களில் இளமையிலேயே பிள்ளைகளை ஈடுபடுத்துவார்களேயானால் அவர்கள் எதிர்காலத்தில் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் தன்னம்பிக்கையும் இறைநம்பிக்கையும் உள்ளவர்களாகவும் வளர்வார்கள் என்பது உறுதி.

## சைவத்தில் வைணவம்

இங்கே இன்னொன்றையும் சிந்தித்தல் அவசியமாகும். வேளாளர்களில் சிலர் வைணவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் எப்படிச் 'சைவ வேளாளர்கள்' எனும் பட்டியலில் சேர்வார்கள் என்ற கேள்வி எழும். வைணவம் சைவத்தின்

உட்கூறான சமயமேயாகும். முருகனை வழிபடும் கௌமாரம். சத்தியைவழிபடும் சாக்தம், கணபதியைவழிபடும் காணுபத்யம் போன்றவை ஒருகாலத்தில் தனித்தனி சமயங்களாக வளர ஆரம்பித்தன. ஆனால் கச்சியப்பர் போன்ற பெரியோர்களால் இப்பொழுது அவை அனைத்தும் 'சைவமே என்ற நிலைக்கு வந்தாயிற்று. இவைபோன்றே திருமாலை வழிபடும் வைணவமும் சைவத்தினின்றும் வேறுபட்டதில்லை. இதனை நன்கு உணர்ந்து கொள்ளுதல் நலம்பயக்கும். திருமால் சக்தியின் தமையன் என்பதால் சைவத்தின் உட்குடும்பமே வைணவம் என்பதனை யாரும் மறத்தல் கூடாது. எனவே எல்லோரும் ஆண்டவனின் பிள்ளைகள் எனும் உணர்வில் அனைவரும் இணையும்காலம் பின்னேவரும் என்றாலும் இன்று சிவபெருமானை வழிபடுவோர், சிவகுடும்பத்தைச் சார்ந்தோர்என்ற கொள்கையில், 'சைவர்' என்ற ஒரு பெயரின் கீழ் இணைந்து ஒன்றுபட்டு வாழ இதுபோன்ற மாநாடுகள் பெரிதும் பயன்தரும் என்பதில் ஐயமில்லை. இவற்றையே இம்மாநாட்டின் குறிக்கோளாகக் கொள்ளுதல் தக்கது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க இயலாது.

இம்மாநாடு இனிது நடைபெறவும் மாநாட்டில் பங்கு கொள்ளும் அனைவரும் நலம்பல பெற்று நீடு வாழவும் உலகம் சைவ நன்னெறியில் தழைத்து மிளிரவும் எல்லாம்வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க சைவம்!

வளர்க சைவவேளாளர்கள்!!

# அட்டைப்பட விளக்கம்

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள், திருக்கயிலாய யாத்திரை செய்து, குரு தரிசனம் செய்ய தருமை வந்த காசிவாசி முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கு "கயிலை மாமுனிவர்" என்ற சிறப்புப் பெயர் சூட்டி ஆசீர்வதித்து வழங்கிய அருட்காட்சி இவ்விதழ் அட்டைப்படமாகத் திகழ்கிறது.

அங்ஙனம் வழங்கப்பெற்ற வெள்ளிப்பட்டயத்தில் பொறிக்கப் பெற்றுள்ள வாசகம் :-

"காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

நமது கண்மணியிற் சிறந்த காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரானுக்குப் பண்டாரத் திருவுளத்தினலே சிவஞ்ஞானம் மென்மேலும் உண்டாவதாக.

நாளது துத்துபி ஆண்டு ஆனித்திங்கள் 31 ஆம் நாள் (15—7—82) நவமிதிதி பரணி விண்மீன் கூடிய நன்னளில் திருக்கயிலாய நாதனைத் தரிசித்துப் பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றதை முன்னிட்டு அங்குத்திக்கு "கயிலை மாமுனிவர்" ஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் என்னும் நாமம் நானிலம் எங்கும் நயப்புற மன்னுவதாக.

தருமை ஆதீனம்"

16—8—82

# மன்பதைக்கு உரிய சமயம் யாது?*

## திரு. வி. கல்யாணசுந்தரனர்

"சைவம் சிவ சம்பந்தம், சிவம் அன்பு. "அன்பே சிவம்" —திருமூலர். "இன்பமே என்னுடை அன்பே" —மாணிக்கவாசகர். அன்பாகிய சிவத்தின் நெறி சைவம் ஆகும்.

அன்பு நெறியாகிய சைவம் மன்பதைக்குப் பொதுவானது. அஃது ஒரு நாட்டார்க்கோ, ஒரு மொழியார்க்கோ, ஒரு நிறத்தார்க்கோ, ஒரு மதத்தார்க்கோ, ஓரினத்தார்க்கோ உரியதன்று. அஃது எல்லோர்க்கும் உரியது.

எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் சிவம், ஒரு நாட்டில், ஒரு மொழியில், ஒரு நிறத்தில், ஒரு மதத்தில், ஓரினத்தில் எங்ஙனங்கட்டுப்பட்டுக் கிடக்கும்? எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பது சிவமாதலால், எவ்வுயிரையும் தன்னுயிர்போல் கருதிப் பயன் கருதாப்பணி செய்வது, சிவநெறி நிற்பதற்கு அறிகுறியாம். "எல்லாரும் ஏத்தும் ஈசன்"— "உரைசேரும் எண்பத்து நான்கு நூருயிரமாம் யோனி பேதம்! நிரை சேரப்படைந் தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்ருன் கோயில்"— ஞானசம்பந்தர். "எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" —சைவசமயநெறி. மன்பதைக்கே உரியதாயிருந்த சைவத்திற்கு நாளடைவில் நாடு, மொழி, சாதி, சம்பிரதாயம் முதலிய தளைகள் இடப்பட்டன. அதனல் சைவம் சிறைப்பட்டது என்று கூறல் மிகையாகாது. தளைகளை உடைத்துச் சிறையினின்றும் சைவத்தை விடுதலை செய்ய முன்னே சில அறிஞர் முயன்றனர்; இந்நாளிலுஞ் சில அறிஞர் முயன்று வருகிருர்.

முயற்சி நேரிய முறையில் நடைபெறுதல் வேண்டும். மகாநாடுகளாலும், தீர்மானங்களாலும் பிற ஆரவாரங்களாலும் பெரும்பயன் விளைதல் அரிது. சைவ ஆக்கத்துக்குச் சிவனடியே சிந்திக்குந் திருதேவை; சிவபாத விருதயர் திறமும், மங்கையர்க்கரசியார் மனமும், குலச்சிறையார் குணமும் தேவை.

---

* தூத்துக்குடி சைவசித்தாந்தச் சபைப் பொன்விழா (1933) மலர் வாழ்த்துரைப் பகுதியினின்றும் எடுக்கப்பட்டது.

# இலட்சுமி துர்க்கா

பேராசிரியர், **திரு. சொ. அரியநாயகம்** எம். ஏ.,

துர்க்காநீ! வாழ்வில் துணையிருப்பாய் - மாந்தர்
துயர்கெடுப்பாய் ஞானஒளி கொடுப்பாய் - லட்சுமி
(துர்க்கா)

1. பக்தருக்கு உதவிடும் பதினெட்டுக் கரங்கள் - இதய
பதுமத்தில் மலர்ந்திடும் பாதபங் கயங்கள்
முக்தருக்கு அருள்செயும் முடிவிலா வரங்கள் - உன்றன்
மோகனச் சிரிப்பே அண்டசரா சரங்கள்-லட்சுமி (துர்க்கா)

2. அரவிந்தம் அமர்ந்திடும் அலைமகள்நீயே - திரு
அட்சமாலை ஏந்திடும் கலைமகள் நீயே
பர்வதன் பெற்றெடுத்த மலைமகள் நீயே - ஆதி
பராசக்தி நீயே எல்லாம் நீயே - லட்சுமி (துர்க்கா)

3. சித்தசித் தாத்ம ஆனந்த ரூபிணி - மகிஷா
சூரசம் காரினி ஒருசிம்ம வாகினி
சத்துவ ராஜஸ தாமஸ மோகினி - பிரம்ம
சாரிணி ரோகிணி சசிதிதி சூலினி - லட்சுமி (துர்க்கா)

4. 'ஐம்ஹ்ரீம் கலீ'மெனும் அட்சரத்து அமர்வாய் - ஓர்
அணுவினுக்கு அணுவாய் அற்புதம் தருவாய்
ஐம்புலனுக்(கு) எட்டாத ஆற்றலாய்த் திகழ்வாய் - என்றும்
ஆக்கிஅளித்(து) உலகை அழிப்பதில் மகிழ்வாய் - லட்சுமி
(துர்க்கா)

5. சங்குவில் வாள்கதை மணிகேடயம் - சக்தி
சக்கரம் கோடரி வஜ்ராயுதம்
பொங்குதா மரைபாணம் தண்டாயுதம் - பாசம்
பானபத்திரம் கமண்டலம் பாசாயுதம் - தாங்கும் (துர்க்கா)

6. சும்பா நிசும்பரைத் தொலைத்தவள் வாணி - மது
கைடபர் உயிர்கெட முடித்தவள் மாரி
அம்மா மகிஷனை அழித்தவள் தேவி - மூன்று
அம்சமும் ஒன்றாய் அமைந்தனை சூலி - லட்சுமி (துர்க்கா)

7. அறம்பொருள் இன்பம் வீடும் சமைப்பாய் - முகில்
அலைகடல் சோலை அருவியாய் ஒலிப்பாய்
பரம்பொருள் ஆகிநல் மங்களம் விளைப்பாய் - மகா
லட்சுமிதுர்க்கா தேவியாய் ஜொலிப்பாய்-லட்சுமி (துர்க்கா)

# குடியோட்டிப்பூண்டு (Mexican Pappy)

**தஞ்சை. திரு. நா. தனுக்கோடி,**


மருத்துவ அலுவலர், திருநெய்ப்பேர். 610103

இந்த மூலிகை மெக்ஸிகோவிலும், மேற்கிந்தியதீவுகளிலும் நம் நாட்டிலும் எங்கும் கிடைக்கின்றது. ஸ்வணக்ஷிரி, கஞ்சநக்ஷிரிணி, ஸத்யாநாசி என சமஸ்கிருதத்திலும், பிரும்மதண்டி, குடியோட்டிப்பூண்டு எனத் தமிழிலும் பொன்னூமத்தை என மலையாளத்திலும் சொல்லப்படுகிறது.

செடி சுமார் 1—3 அடிஉயரமும், உடல் முழுவதும்முள்ளும் ஒடித்தால் மஞ்சள் நிறமுள்ள பாலுமுள்ளது. இலை நீண்டு முள்ளுடன் ஓரங்கள் கத்திரியால் நறுக்கப்பட்டதுபோல் வெள்ளைக்கோடுடன்காணும். பூ மஞ்சள்நிறமுள்ளது. காய் 1–1½ அங்குலநீளம், விதை முதிர்ந்தவுடன் கருப்பு வண்ணமாயும், கடுகைவிடச் சிறிது பெருத்து ஒருகாயில் பலவிதைகள்காணும். யானைக்கடுகு என்பர்சிலர். விதையில் 22 சதவிகிதம் எண்ணெயும், மற்ற ரஸாயன சத்துக்களும் உள்ளது. சிலவருடங்களுக்கு முன் தர்மபுரியில் இதன் விதையைச் செக்கிலிட்டு எண்ணெ எடுத்து விளக்கெறித்துவந்தார்கள்.


பிருமதண்டிவிதை எண்ணை மிருதுவான விரேசனமாகும். ஆனல் ஒருநியதமான அளவில்பேதியாகாமல் ஒருதடவை அதிக அளவிலும், மற்றொருதடவை குறைந்த அளவிலும் பேதியாகும். சிலசமயம் வாந்தியாகும் குணமும் உள்ளது. ச்வாஸாசயத்தில் ச்வாஸகஷ்டத்தை நிவிருத்தி செய்யாவிடினும் ஆஸ்துமா, கக்குவான், இருமல் முதலிய நோய்களில் கபத்தை இளக்கி வெளியாக்கியும் ச்வாஸாசயத்தில் நெய்ப்புஏற்படுத்தியும் வயிற்றினுள்சென்ற கபத்தைப் பேதியாக்கி வெளிக்கொணர்ந்தும் உதவுகிறது. வலியையும் குறைக்கின்றது. மருத்துவரின் ஆலோசனையுடன் செய்யவும். பசுமையான செடியைக் கொணர்ந்து இடித்து சம அளவு ஜலம் கலந்து வாலையில் இட்டு காய்ச்சி வடித்த நீர் ஒரு அவுன்ஸ் விதம் காலை மாலை இச்சாபத்தியத்துடன் அருந்த, வெள்ளை, வெட்டை, ரத்தக்கேடு, சொரி, படை, சிரங்கு முதலிய தோல் சம்மந்தமான நோய்கள் குணமாகும். இதன்பால் வீக்கத்தை குறைக்கும். சிறுநீரைப் பிரிக்கும், முறைஜ்வரவேகத்தைதணிக்கும். கண்பொங்குவதைத்தடுக்க விடியற்காலத்தில் இதன் பாலை கண்ணில் இடுவதுண்டு, உடலில் குடிகொண்டநோயை அறவே அகற்றுவதால் குடியோட்டிப்பூண்டு எனச் சிறப்புப்பெயர்பெற்றது.

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
அவர்கள்
ஆவணி முலத் திருநாளில், ஸ்ரீ சொக்ககநாதர் பூஜை மடத்தில்,



டாக்டர். திரு. ப. அருணாசலம் அவர்கட்கு,
'சித்தாந்தக் கலாநிதி' எனும் பட்டம் பொறிக்கப்பெற்ற
பொற்பதக்கம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி ஆசீர்வதித்தல்

தருமை ஆதீனம்
26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ சொக்கநாதர் பூஜை மடத்தில்



திருக்கயிலாயநாதரைத் தரிசித்துக் குருதரிசனம் செய்யவந்த
காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களுக்குச் சொக்கநாதர் பிரசாதம் வழங்கிப்
பொன்னுடை போர்த்தி ஆசியருளல்.

திருக்கயிலாய யாத்திரை செய்து சென்னைக்கு எழுந்தருளிய
காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்கும்
காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்கட்கும்,



சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில்
நிலைய அன்பர்கள் வழிபாடாற்றி வரவேற்பளித்தல்.

# திருக்காரவயில் தலச் சிறப்புகள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,**

சப்த விடங்கத் தலங்களில்ஒன்று. திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் பெற்றது. சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 119 வது தலம். இத்தலம் தஞ்சைமாவட்டம் நாகப்பட்டினம் தாலுக்காவைச் சேர்ந்தது. திருவாரூரிலிருந்து ( 15. கி. மீ. தூரத்தில் ) திருத்துறைபூண்டி செல்லும் பேருந்துவழியில் உள்ளது. திருநாட்டியத்தான்குடி யிலிருந்து. தென்கிழக்காக 6. கி. மீ. தூரம் வந்தால் இத்தலத்தை அடையலாம். இத்தலம் தமிழ்நாடு இந்து அறநிலையத்துறை யினரின் பரிபாலனத்துக்குட்பட்டது.

## தலப்பெருமை :

இத்தலம் காரகில் மரக்காடாகஇருந்தமையால் காரகில் வனம் எனப்பெயர் பெற்றது. வழக்காற்றில் திருக்காராகில் வனம் திருக்காரகில் என்ருகிப் பின் திருக்காரவாசல் எனப் பெற்றது. வடமொழியில் இத்தலத்திற்கு காளாகருவனம், பன சாரண்யம், தேவதாருவனம், பிரமபுரம், கபாலபுரம், கபித்தவன புரம், புத்திரப்பிரதம், முதலிய பெயர்கள் உள்ளன.

கிரேதயுகத்தில் கபாலவனம் எனவும், திரேதயுகத்தில் கபித் தவனம் எனவும், துவாபரயுகத்தில் பனசாரணியம் எனவும், கலியுகத்தில் காளாகருவனம் எனவும் வழங்கப் பெற்றதாகத் தலபுராணம் கூறும்,

சப்தவிடங்கத்தலங்களில் இது ஆதிவிடங்கத்தலம். முசுகுந்த சோழமன்னர் இந்திரனிடம் பெற்றுவந்த ஏழு தியாகேசர் திருவுருங்களில் ஒன்றை இத்தலத்தில் எழுந்தருளச் செய்து வழிபட்டார். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப் பதிகம் ஒன்று இத்தலத்திற்குள்ளது.

இத்தலத்துக்கு அருகே திருக்கச்சினம், திருநெல்லிக்கா, வலிவலம், திருநாட்டியத்தான்குடி முதலிய தலங்கள் உள்ளன.

**கோயிலமைப்பு :**

கிழக்கு நோக்கிய சந்நிதி. வடபால் தீர்த்தம் உள்ளது நாட்டுக்கோட்டை நகரத்தாருள் தேவக்கோட்டை முத்து கரு. அரு., முத்து. க. மா., முத்து. க. அ. லெ. ஆகியோரின் அரிய கருங்கல் திருப்பணிகளைப் பெற்று விளங்குகிறது. மூன்று நிலைகளுடன் கூடிய அழகிய சிறிய கோபுரம் கோயிலுக்கு அழகு ஊட்டுகிறது. கோபுரவாயிலில் கொடிமரம் உள்ளது. வாயிலின் வலதுபுறத்திலும், இடதுபுறத்திலும் விநாயகரும், முருகனும் உள்ளனர்.

பிராகாரத்தில் தியாகேசர் சந்நிதிக்கு எதிரே சுந்தரர் விளங்குகிறார். தென்பால் சமயாசாரியர் சேக்கிழார் எழுந்தருளி விளங்குகின்றனர். மேற்குப் பிராகாரத்தில் விசுவநாதர், விசாலாட்சி, பிரமோதவிநாயகர், எல்லையம்மன், இந்திரபுரீசுவரர், ஸ்திர லிங்கம், கௌதமலிங்கம், ஆகிய மூர்த்திகள் உள்ளனர். அடுத்து பிட்சாடனர், சந்திரசேகரர், காட்சிக்கொடுத்த நாயனார், முருகன், திருமகள், கலைமகள், மாரியம்மன், சந்நிதிகள் உள்ளன. வடக்குப்பிராகாரத்தில் சிறிய நடராசர் விளங்குகிறார். கிழக்கே சந்திரன், சூரியன், பைரவர் உள்ளனர். வலமாக வந்து சுவாமி சந்நிதியை அடையலாம். தென்புறம் தியாகேசர் சந்நிதி உள்ளது. மகாமண்டபத்தில் அழகிய நடராசர், பிட்சாடனர், கல்யாணசுந்தரர் மற்றும் பஞ்சமூர்த்திகள் உள்ளனர். அம்பாள் முன் மண்டபத்தில் தெற்குநோக்கி விளங்குகிறார்.

**மூர்த்திகள் :**

சுவாமி திருப்பெயர் அருள்மிகு கண்ணாயிரநாதர். சுயம்பு மூர்த்தி கல்வெட்டில் திருக்காறாயிலுடையார் என்றும் திருக் காறாயில் நாயனார் என்றும் கூறப்பட்டுள்ளது. அம்பிகையின் திருப்பெயர் அருள்மிகு கைலாசநாயகி. தியாகேசருக்கு ஆதி விடங்கத் தியாகர் என்பது பெயர். மரகதலிங்கம் தியாகர் சந்நிதியிலுள்ளது. தலமரம் பலா. அகில்மரம் இத்தலமரமாதல் வேண்டும். தீர்த்தம் பிரமதீர்த்தம் கோயிலின் வடபாலுள்ளது. மற்றும் சேஷதீர்த்தம், என்னும் வடக்குப் பிராகாரத்திலுள்ள கிணறும் சிறப்புடைய தீர்த்தமாகும்.

**புராணவரலாறுகள் :**

கபாலமுனிவர் செய்த தவத்துக்கு இரங்கி அம்பிகை அவருக்குக் காட்சிதந்து அருள்செய்தார். இத்தலத்தின் பெயர்களில் கபாலபுரம் என்பதும் ஒன்றாகும். சிவசர்மா என்னும் அந்தணன் இத்திருக்கோயிலைப் புதுப்பிக்க எண்ணிய காலத்தில்

இறைவன் நாடோறும் அவனுக்கு இரத்தினம் ஒன்றையளித்து உதவினர். அந்தணன் திருக்கோயில் திருப்பணி திருவிழா முதலியவற்றைச் செய்து மகிழ்ந்தான். பிரமவிஷ்ணுக்கள் தாமே பெரியர் எனத் தருக்கியதால் ஏற்பட்ட குற்றம்தீர இத்தலத்து இறைவரைப் பூசித்துக் கழுவாய் பெற்றனர். திருவாரூர்க் கமலாலயத்தில் மூழ்கியோர் இந்திரராகி வருதலை அறிந்து அதனைத்தூர்க்கக் கூறிய இந்திரன் தன் பழிநீங்க இத்தலத்து இறைவரைப் பூசித்துப் பாவம் நீங்கினன். இலக்குமி தானே அழகி எனவும் தன் கணவனே முழுமுதற்கடவுள், எனவும் தன் மகனே அழகன் எனவும் தருக்கிபபழிதீர இத்தலத்திற்கு வந்து பழிநீங்கப் பெற்ருள்.

காஷ்மீரதேசத்து அரசன் சந்திராங்கதன் இத்தல வழிபாட்டால் பிள்ளைப்பேறு எய்தினன். மாகந்தன் என்னும் பிராமணன் தன் வறுமை நீங்கக் காலவ முனிவர் கட்டளைப்படி காருயில் வந்து வழிபட்டுப் பெருஞ்செல்வனனன். சுந்தர தீக்ஷிதர் சக்தி வழிபாடுடையவர். அவர் மகளிர் ஒன்பதின்மர் சிவபெருமானை வழிபட விரும்பி இந்நகர் வந்து இறைவனைக் காணமுடியாது வெள்ளாற்றங் கரையில் நின்று வருந்திய போது அவர்கட்கு இறைவன் அம்மையும் தானுமாய்க் காட்சி அளித்துக் கருணை பூத்தார். மனோரமை என்னும் தாசி ஒருத்தி இறைவனிடம் பக்தி செய்து வந்தாள். இரவு ஆறு நாழிகை முதல் பன்னிரண்டு நாழிகை வரை தன்பால் வருவார்க்குத் தான் மனைவியாயிருக்கும் விரதம் பூண்டிருந்தாள். இறைவன் கிழவேதியராய் அவளை அடைந்து நடுயாமத்து இறந்தவர் போலானர். மனோரமை அக்காலத்து அவர் மனைவியாயிருக்கும் உரிமை பூண்டிருந்ததால் அவரோடு தானும் உடன் கட்டையேறினள். இறைவன் அவளுக்குக் காட்சியளித்து அவளது பக்தியையும் தூய எண்ணத்தையும் உலகவர். அறியச் செய்தருளினன்.

கபித்தன் என்னும் அந்தணன் இத்தலத்தில் நீரால் விளக்கெரித்து வீடு பெற்ருன். வீரேந்திரசோழன் அக்கினி வேசியர் கூறியபடி இத்தலத்திறைவரை வழிபட்டுக் காம நோய்நீங்கப் பெற்ருன். திருமால் வாகனமாக விளங்கிச் சிவநிந்தை புரிந்த கருடன் சிவஉபதேசம் பெற்றுத் தான் செய்துவந்த சிவநிந்தை நீங்கப்பெற்றது. என்பன முதலிய புராணவரலாறுகள் இத்தலத்திற்குள்ளன.

**தீர்த்தங்கள் :**

கணவனைப் பழித்த குற்றத்தால் 'வெண்குட்ட நோய்பெற்ற கலாவதியும், தேவலர்என்னும் தேவகுருவின்வீட்டுப்பொருளைத்

திருடியதால் வயிற்றுவலியுற்ற அவள் கணவன் தேவசருமனும் தேவல முனிவரின் கட்டளைப்படிக் திருக்காருயில் வந்து பிரம தீர்த்தத்தில் முழ்கி நோய் நீங்கினர். சந்திரன் குருபத்தினியைச் சேர்ந்ததால் ஏற்பட்ட உடற்குறை நோயை இத்தீர்த்தத்தில் மூழ்கிப் போக்கிக்கொண்டான். இந்திரன் இத்தலத்தில் ஓடும் வெள்ளாற்றில் முழ்கிஇறைவனைவழிபட்டு அவுணரை வெல்லும் ஆற்றல் பெற்றான்.

இத்தலத் திருக்கோயிலின் வடக்குப் பிராகாரத்திலுள்ள சேஷதீர்த்தத்தைக் காலையில் காணின் அன்றுடம் செய்த பாவம் தீங்கும். மாதப்பிறப்பு, அமாவாசை, சோமவாரம், பௌர்ணமி நாட்களில் மும்முறை வலம்வந்து சிறிதுநீர் எடுத்துக் குடித்தால் பிரமகத்தி முதலிய கொடிய பாவங்கள் தொலையும். செல்வம் உண்டாகும் என இத்தலத் தீர்த்தச் சிறப்புக்களைத் தலபுராணம் கூறுகிறது.

**தியாகேசர் :**

வீதிவிடங்கத் தியாகேசரை இந்திரன் திருமாலிடம் பெற்று வழிபட்டுவந்தான். அவனிடமிருந்த தியாகரை முசுகுந்த சோழன் பெற்றுவந்து திருவாரூரில் பிரதிட்டைசெய்து வழிபட்டு வந்தான். திருமால் நாள்தோறும் திருவாரூர் சென்று தியாகேசரை வழிபடுவதோடு இறைவாது அஜபா நடனத்திற்கு வாத்தியத்தொண்டும் செய்துவந்தார். கருடன் மூலமாக இதனை அறிந்த ஆதிசேடன் தானும் இறைவனது திருநடனத்தைக் கான விழைந்து புறப்பட்டது. கருடன் ஆதிசேடனைத் தன் அலகால் இருதுண்டாக்க, ஆதிசேடன் சிவத்தியானம்செய்து வந்ததால் பதஞ்சலி முனிவராகி இறைவனது நடனத்தைக் கண்டுதரிசிக்கும்பேற்றை அடைந்தது. பதஞ்சலி இறைவனது எல்லாவகையான நடனங்களையும்காண விழைந்தார். இறைவன் திருக்காருயில்வருமாறு பணித்து அங்கே தமது எழுவகைத் தாண்டவங்களையும் அவருக்குக் காட்டினர்.

இத்தலத்து விளங்கும் தியாகர் ஆதிவிடங்கர் எனப்படுவர். ஆசனம் வீரசிங்காசனம் எனப்பெறும். நடனம் – குக்குட நடனம்.

**சப்தவிடங்கத் தலங்கள் :**

திருவாரூர் – வீதி விடங்கர், அசபா நடனம். திருநள்ளாறு – நகவிடங்கர், உன்மத்தநடனம். நாகை – சுந்தரவிடங்கர்-

பாராவாரதரங்க நடனம். திருக்காருயில் – ஆதிவிடங்கர். குக்குட நடனம். திருக்கோளிலி – அவனிவிடங்கர். பிரமர நடனம். திருவாய்மூர் – நீலவிடங்கர். கமல நடனம். திருமறைக்காடு – புவனிவிடங்கர். ஹம்சபாத நடனம்.

**கடுக்காய் விநாயகர் :**

பிரமதீர்த்தக்கரையில் விநாயகர் கடுக்காய்விநாயகர் எனப் பெறுகிருர். வணிகள் ஒருவன் சாதிக்காய் முட்டைகளோடு வரும் வழியில் இத்தீர்த்தக்கரையில் தங்கி இளைப்பாறினன். அங்குவந்த அந்தணச் சிறுவன் வணிகனைநோக்கி இது என்ன முட்டைகள் என வினவ் வணிகன் அச்சிறுவனிடம் உண்மையைக்கூற விரும்பாமல் கடுக்காய் முட்டைகள் என்ருன். வந்த சிறுவன் விநாயகர்கோயிலுக்குள் சென்று மறைந்தான். சிறிது நேரங்கழித்து அவ்வணிகன் முட்டைகளின் சாக்குகளை மாற்ற முற்பட்டபோது அவை கடுக்காய்களாக இருக்கக் கணடு துணக்குற்று அந்தணச் சிறுவனுய் வந்தவர் விநாயகரே என உணாந்து பிழை பொறுத்தருளுமாறு வேண்ட, விநாயநரும் கருணைகூர்ந்து அம்முட்டைகள் சாதிக்காய்களாகுமாறு செய் தருளினர். இவ்வரலாற்ருல் இங்குள்ள விநாயகர் கடுக்காய் விநாயகர் எனப்பெறுகிருர்.

**பாடல்கள் :**

இத்தலத்துக்கு ஞானசம்பந்தர் அருளிய இந்தளப் பண்ணோடு கூடியதிருப்பதிகம் இரண்டாம் திருமுறையில்இடம் பெற்றுள்ளது. திருப்பதிகம் இத்தலத்தின் நீர்வளம் நிலவளம் ஆகியவற்றையும் இறைவன் பெருமையையும் கூறுகிறது. இத்தலத் திருப்பதிகத்தை ஓதிவழிபடுவோர் சிவலோகம் ஆள்வர் எனப் பதிகப் பயன் கூறப்படுகிறது. காருயில் இறைவனை வ்ணங்குவார், ஊனமிலார், பாவமிலார், ஏதமிலார், மேல்வினை மேவார், என்றும் கூறுகிறது. இத்தலத்தைக் குறிப்பிட்டு அப்பர் அருளிய இரண்டு திருத்தாண்டகப் பாடல்கள் (6 - 70 – 6, 6 – 79 – 8) உள்ளன. தேவக்கோட்டை சிதம்பரம் செட்டியார் இயற்றிய தலபுராணம் உள்ளது.

**திருப்பணி :**

நாட்டுக் கோட்டை நகரத்தார் கருங்கல் வேலைப்பாடுகளுடன் இத்திருக்கோயில் திருப்பணிகளை நன்கு நிறைவேற்றிப் பிங்கள ஆண்டு தைத்திங்களில் மகாகும்பாபிஷேகம் செய்வித்

துள்ளனர். திருக்குளம், திருநந்தவனம், பசுமடம், குருபூசை மடம் முதலியன அமைத்தும் வாகனங்கள் திருவாபரணங்கள் திருத்தேர் செய்தளித்தும் பெரும் பொருட் செலவில் இத் தலத்தைப் பரிபாலித்துள்ளனர். திருப்பணியாளர்குடும்பத்தினர் இன்றும் திருக்கோயில் அறங்காவலர்களாக விளங்கி நித்ய பூசை நைமித்திகபூசை முதலியவற்றுக்குக் கட்டளைகள் அமைத்து வழிபாடு நன்கு நடைபெறச் செய்துவருகின்றனர்.

## பூசை திருவிழா :

நாள்தோறும் ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி விசாகத்தையொட்டிப் பெருவிழா நிகழ்கிறது. மற்றும் விசேட நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்கின்றன..

## கல்வெட்டுக்கள் :

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் நான்கு உள்ளன. அவற்றுள் மூன்று மும்மடிச் சோழன் என்னும் சிறப்புப்பெயர் தாங்கிய முதல்இராசராசதேவன் ( கி பி 985 - 1014 ) காலத்தன. அவற்றுள் இத்தலம் அருண்மொழித் தேவவளநாட்டு புலியூர் நாட்டு வலிவலக் கூற்றத்து மாஹூர் வட்டத்தைச் சார்ந்தது என்பதும், இறைவர் திருக்காருயில் மாதேவர் என வழங்கப் பெற்றது என்பதும். இக்கோயுலின் திருவோலக்கத் திருமண மண்டபம் அம்மன்னனால் கட்டப்பெற்றது என்பதும், இக் கோயில் திருக்கைக் கோட்டிலிருந்து திருமுறை பாடுவார்க்கு நிவந்தம் அளிக்கப்பட்டு வந்தசெயதியும், திருமுறை ஓதுவதற்கு நமச்சிவாயத் திருமேனி என்பார். நியமிக்கப்பெற்ற செய்தியும் அறியப்பபடுகிறது இராசேந்திரசோழன் கல்வெட்டு ஒன்றினால் திருக்காருயிலுடையார்க்கு திருவிளக்கு இடுவதற்கு நிவந்தம் அளிக்கப்பெற்றிருந்த செய்தி அறியப்படுகிறது.

நீரானே நீள்சடை மேலொர் நிரைகொன்றைத்
தாரானே தாமரை மேலயன் ருன்றொழும்
சீரானே சீர்திக ழுந்திருக் காருயில்
ஊரானே யென்பவ ருனமி லாதாரே.

ஏய்ந்தசீ ரெழிறிக ழுந்திருக் காருயில்
ஆய்ந்தசீ ரானடி யேத்தி யருள்பெற்ற
பாய்ந்தநீர்க் காழியுண் ஞானசம் பந்தன்சொல்
வாய்ந்தவா றேத்துவார் வானுல காள்வாரே.

கட்டுரை எண். 30

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A., D. U. N., I. U.

சித்தியும் சித்திதரும் தெய்வமாகித் திகழும் பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவமுயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29

## அ. சித்தியும்

(1) சித்திகளாக இருப்பவளும் திரிபுர சுந்தரியே ஆவாள்.

(2) அணுவுருவாய் நுணுகும் ஆற்றலைப்பெறுதல் 'அணிமா' என்னும் சித்தியாகும்.

பேருருக்கொள்ளும் ஆற்றலைப்பெறுதல் 'மகிமா' என்னும் சித்தியாகும்.

மலைபோல் தன்னைப் பளுவாக்கிக் கொள்ளும் திறமை 'கரிமா' சித்தியாகும்.

காற்றினைப்போல் தன்னை இலேசாக்கிக் கொள்ளுதல் 'இலகிமா' சித்தியாகும்.

தான் வேண்டுவனவற்றை யெல்லாம் அடைதல் 'ப்ராப்தி' சித்தியாகும்.

வேண்டுவனவற்றையெல்லாம் தனதிருப்பிடம்வரவழைத்து நுகர்தல் 'பிரகாமியம்' என்னும் சித்தியாகும்.

இறைவனைப்போல் படைத்தும் காத்தும் அழித்தும் செயல்படும் ஆற்றலைப்பெறுதல் 'ஈசித்வம்' என்னும் சித்தியாகும்.

அனைத்தையும் தன் வசமாக்கி ஆளும் திறன் எய்துதல் 'வசித்வம்' என்னும் சித்தியாகும்.

(3) இச்சித்திகளைத் தணிகைப் புராணம் அகத்தியன் அருட்பெறு படலத்தில் கீழ்க்கண்ட பாடலில் குறிப்பிடுகிறார் கச்சியப்ப முனிவர்.

அணுவினுள் நுழை நுண்ணுருக் கொளல், ஆழ்ந்த
அளற்றிடை அஃது ஒட்டாது இயங்கல்,
மணிநெடு வரையிற் பெருத்தல், வேட்டனஎவ்
வளங்களும் செறிதல், ஆயிரவர்
திணிமுலை திளைத்தல், பெரு வலியினரும்
சென்றடி பேணல் யாவர்களும்
தணிவர விழைதல், வலியரும் தடாமை
சாற்றிய இவைகள் எண்சித்தி.

(4) அணிமா முதலிய இவ்வெண் சித்திகளும்மெய்ஞானத்துக்கு உதவாத சித்திகளாகும். இவற்றினை 'அபரசித்தி'கள் எனவும் 'மருட்சித்தி'கள் எனவும் மேலோர் கூறுவர்.

சிவயோகிகளும், சாக்தஸாதகர்களும்இவற்றினைவிரும்பார். இச்சித்திகள் முதற்படியாகுமே ஒழிய முக்கியக்குறிக்கோளை எட்ட உதவாது.

முத்திக்கு உதவா இச்சித்திகளை விலக்கியொழிக்க வேண்டுமென இராமகிருஷ்ண பரமஹம்சர் மிகவும் வலியுறுத்துகிறார்.

(5) பின் உயர்வான சித்திகள் யாவை? திருமந்திரம் மூன்றாந்தந்திரத்துள் திருமூலர் குறிப்பிடுகிறார்

சித்திகள் எட்டன்றி சேரெட்டி யோகத்தால்
புத்திக ளானவை எல்லாம் புலப்படும்
சித்திகள் எணசித்தி தானாந் திரிபுரை
சத்தி அருள்தரத் தானுள வாகுமே.

மேலான 'பரசித்தி'கள் அல்லது 'அருட்சித்தி'கள் என்றே இவை கூறப்படுகின்றன.

அணுத்துக்கும் நுண்ணியனான இறைவனைச்சிவயோகத்தால் தானும் நுண்ணியனாகி அறிந்து காணுதல் 'பர அணிமா' எனப்படும்

இவ்வாறே, மற்ற எழு சித்திகளையும் அவை யென்னென்ன என்பதனையும் திருமந்திரத்தில் ஒவ்வொன்றினையும் இரண்டு மூன்ற மந்திரங்களால் குறிப்பிடுகிறார். அனுபவமிக்க ஆசிரியர் மூலம் பொருள் கேட்டுணர்தல் தெளிவினைக் கொடுக்கும்.

(6) ஸ்ரீ வித்தையில் பத்துசித்திகள் கூறப்படுகின்றன அணிமா முதலிய எட்டினுள் 'கரிமா'வை நீக்கி, 'புத்தி சித்தி' 'இச்சாசித்தி சர்வகாமசித்தி' ஆகிய மூன்றினையும் சேர்த்து எண்ணிக்கை பத்தாகும். சித்திதேவிகள் என்றே இச்சித்திகள் பெயர் பெற்றுள்ளன.

(7) இவையன்றி காயசித்தி, யோகசித்தி, மந்திரசித்தி முதலிய அனைத்தும் புரத்தை என்னும் திரிபுரசுந்தரியே ஆவாள்.

## ஆ. சித்திதரும் தெய்வமாகித்திகழும் பராசத்தியும்

(1) அச்சித்திகளின் வடிவாகி அவற்றினை அருளும் தேவிகளின் வடிவும் ஆகித்திகழும் பராசக்தியாக இருப்பவளும் திரிபுரையே.

(2) ஸ்ரீ சக்கரத்தில் முதல் ஆவரணமாகிய "த்ரை-, லோக்ய மோகனம்" என்னும் ஆவரணத்தில் முதல் ரேகையில் அணிமா சித்தி முதல் சர்வகாமசித்தி வரையுள்ள பத்து சித்திகளும் அதே பெயர்பெற்று (அணிமாசித்தி, லகிமாசித்தி) என விளங்குகின்றனர்.

இவர்கள் அனைவரும் அம்பிகையின் வடிவமே. அல்லது அவர்கள் வடிவிலிருந்து சித்திகளை அன்னையே வழங்குகிறாள்.

இம்முதல் ஆவரணத்துக்கு நாயகி அல்லது 'சக்ரேச்வரி' என திரிபுரையினைக் குறிப்பர்.

சித்திகளாக இருக்கும் அவளே அச்சித்திகளைத் தரும் தெய்வங்களாக விளங்குகிறாள் என்பதனை சித்திதரும் தெய்வமாகித் திகழும் பராசக்தியும் என்றார்.

(3) பராசக்தியாக இருப்பவளே சித்திதரும் தெய்வங்களாகவும் திகழ்கிறாள்.

ஆவரணங்கள் அனைத்தையும்கடந்த 'பிந்துமண்டலத்தில்' மஹாதிரிபுர சுந்தரியாக எழுந்தருளும் மேலான பராசக்தியே முதல்ஆவரணத்தில் சித்திதரும் தெய்வகளாகத் திகழ்கிறாள்.

'பராசக்தி' என்பதற்கு மேலான சக்தி என்றும் வேறான சக்தி என்றும் பொருள்.

சித்திகள், மற்ற யோகினிகள் முதலிய அனைவரின் வடிவானலும், அவர்களினின்றும் வேறுபட்டும் மேலானவளாகவும் விளங்குபவள் பராசக்தி.

அல்லது 'பரா' என்ற மூல ஒலியின் வடிவான 'நாதம் பிரம்மம்' ஆகியவள் பராசக்தி.

(4) குடகுமுதல் புகார் வரை செல்லும் காவிரிக்குப் பல கிளை நதிகள் உண்டு. தஞ்சை திருச்சிமாவட்டங்களில் எல்லா நதிகளையுமே கிராம மக்கள் 'காவேரி' என்றே குறிப்பிடுவர்.

"குடமுருட்டிக்குச் சென்று குளித்து வருகிறேன்" என்றோ "அரசலாற்றுக்குச்சென்று குளித்துவருகிறேன் என்றோகூறுது", காவேரியில் நீராடி வருகிறேன் என்றுதான் கூறுவர்.

ஆனல் அரசலாறும், குடமுருட்டியும் காவிரி அல்ல எனினும் காவிரியின் வளமைமிக்க நன்னீரே அவற்றிலும் ஓடுகின்றது.

காவிரிபோன்று வளங்கொடுக்கும் ஆற்றல் அவற்றுக்கு இருந்தும், அதேபெயருடன் மக்கள் அன்புடன் குறிப்பிட்டு வந்தும் அவை கிளைநதிகளே! காவிரி அவற்றினின்று வேறான மேலான மூல நதி.

அவ்வாறே சித்தியாகவும் சித்திதரும் தெய்வமாகிவிடினும் அத்திரிபுரை 'பராசக்தி' யாவாள்.

(5) எங்கும் 'சான்னித்யம்' பெற்றும் அவள்பெயரே புகழ் பெற்று விளங்குவதாலும், மேலாகத் திகழ்வதாலும் திகழும் பராசக்தி என்றார்.

(6) முன்விளக்கத்தில் எடுத்துக்காட்டப்பட்ட திருமந்திரத்தின்

"சித்திகள் எண்சித்தி தானுந் திரிபுரை
சத்தி அருள்தரத் தானுள வாகுமே"

என்றபகுதி "அவளே சித்திகள் ஆவாள், அவளே அவற்றினை அருள்பவள்" என்ற கருத்துக்களையே கூறுகிறது.

இங்கும் 'திரிபுரை' என்ற பெயர்வருதல் காண்க. (அந்தாதியில் புரத்தை எனகிறார்)

(7) சகஸ்ரநாமத்தில் அம்பிகை பர சித்தி என்னும் அருட் சித்தியாய் இருப்பது, அவற்றின் தலைவியாய் இருப்பது, அவற்றினை அருள்வது முதலியவற்றினை "மஹாசித்தி" "சித்த மாதா" "சித்தேஸ்வரி" ஆகிய நாமங்கள் குறிப்பிடுகின்றன.

## இ. சத்தி தழைக்கும் சிவமும்

(1) அப்பராசக்தி கிளைத்தற்கு ஏதுவாகிய பரசிவமும் திரிபுரையே.

(2) 'சத்திதான் சிவத்தை ஈன்றும் சிவம்சத்தியை ஈன்றும்-" என்றபடி சிவத்தினின்று சக்தி கிளைத்துத் தோன்றுவதால் சக்தி தழைக்கும் சிவம் என்றார். இது சைவபரமான விளக்கம்.

(3) தழைத்தல் என்பது ஒருவிதமான வளமையான வாழ்வினைக் குறிக்கும். "குடும்பம் தழைத்தோங்க வேண்டு" மென வாழ்த்துவதைக் கேட்கிறோம்.

உலகியல்படி, பெண்ணின் வாழ்வுக்கு கண்ணிறைந்த கணவனே வளமையினைத் தருபவன் ஆவான். எல்லாத்தன்மைகளாலும் இணையற்ற இறைவன் அவளுக்குப் பதியாக அமைந்திருக்கிறன் என்றால் அதைவிட வளமை அல்லது தழைப்பு வேறு எதுவும் இல்லை. எனவே சிவத்தால்தழைக்கிறாள் என்பது தோன்ற 'சத்தி தழைக்கும் சிவம்' என்றார்.

'ஸ்தாணு' என்ற பெயருக்குரியவனாகி அசைவற்ற பட்ட மரம் போல் இருக்கும் சிவனைத் தனது தழைப்பினால் பசுமையாக்குபவள் சக்தி என்பது சாக்தபரமான விளக்கம்.

உலகியற்படியும் பெண்ணில்லா வீடு பொலிவின்றித் தோன்றுதல் கண்கூடு

### ஈ. தவமுயல்வார் முத்தியும்'

(1) தவத்தை முயன்று புரிபுவர் அடையும் முத்தியாய் இருப்பவளும் புரத்தையே.

(2) தவம் முயன்று புரிபவரின் குறிக்கோள் முத்தியடைதலாகவே இருத்தல் வேண்டும். வேறு அற்ப ஆட்சிக்காகவும், ஆற்றலுக்காகவும் முயலுதல் வீணேயாகும்.

தக்கனுக்குப் பிரமனும், தக்கன் மக்களுக்கு நாரதரும் இக்கருத்தினையே வலியுறுத்துவதனைக் கந்தபுராணம் எடுத்துக் காட்டுகிறது.

தவமியற்றுவோரின் முடிவான குறிக்கோள் முத்தியாகவே அமையவேண்டுமாதலால் 'தவம்முயல்வார் முத்தி" என்றார்.

(3) தவம் முத்திக்கு அழைத்துச்செல்ல உதவும் ஒருவகை முயற்சியே அன்றி அதுவே முடிவல்ல.

அதனை மிகவும் முயன்று புரிதலும் வேண்டுமாதலால் "செய்தவம் ஈண்டு முயலப்படும்" என்று திருவள்ளுவர் கூறியவாறே இவரும் 'தவம் முயல்வார்' என்றார்.

(4) முத்திரூபா – முத்திவடிவினள் என்று புகழ்கிறது சகஸ்ரநாமம். பட்டரும் அழியாமுத்தி யானந்தமே என அழைத்தார்.

## உ. முத்திக்கு வித்தும்

(1) அம்முத்திக்கு விதையாக இருப்பவளும் அவளே.

(2) "தவமும் தவமுடையார்க்கே சாலும்" என்றபடி அதற்கும் ஒருதவம் இருத்தல்வேண்டும். அதைப் பெற்றிருத்தலுக்கும் ஒருகாரணம்வேண்டும். அம்மூலகாரணமேதிருவருள். அதுவே வித்து அவளருளாலேயே அவள்தாள் அடைய முடியும். எனவே மூலகாரணமான திருவருளும் அவளே.

## ஊ. வித்தாகி முளைத்தெழுந்த புத்தியும்

(1) அவ்வருள் வித்தாகி அதனினின்று முளைத்து எழுந்த மெய்ஞ்ஞானமாகிய புத்தியும் அவளே.

(2) "புத்தி;" "மஹா புத்தி" ஆகிய நாமங்களும் இதனையே குறிப்பிடுகின்றன.

அறியும் திறன் படைத்த அந்தக்கரணமே புத்தி என்பர். இங்கு அவளை அறியும் மெய்யறிவே புத்தியாகியது.

## எ. புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே !

(1) அப்புத்தியின் உள்ளே நின்று காப்பவளும் அவளே.

(2) மேற்கூறிய அனைத்துமாய் இருப்பவள் மும்மூன்றாக உள்ளவற்றுள் உறையும் திரிபுரசுந்தரியாவாள். புரங்களில் உறைபவள் புரத்தையானாள்.

(3) அன்னை 'தர்மசாரிணி' என்ற பெயருடன் இருந்து புத்தியைக்காப்பாற்றுகிறாள்எனத் 'தேவிகவசம்' குறிப்பிடுகிறது.

(4) புத்தியின் உள்ளே எட்டு வகையான ஆற்றல்கள் இருக்கின்றன என்பதனை நம்முன்னோர் நவீனமனவியல் விஞ்ஞானிகளைவிட மிகத்தெளிவாக ஆய்ந்து கூறியிருக்கிறார்கள். எனவே புத்தி 'அஷ்டாங்க புத்தி' எனப் பெயர்பெறும்.

அவ்வெட்டு ஆற்றல்களாவன :-

I கேட்டலாகிய ஆற்றல் – 'கிரஹணம்'

II கேட்டதைத் தன்னுள் நிறுத்துதல் – "தாரணம்"

III அதனை வேண்டும்பொழுது நினைவுகூறல் – "ஸ்மரணம்"

IV அதனை எடுத்து விளக்கல் – "பிரவசனம்"

V ஒன்றினைக்கொண்டு பிறிதொன்றை அறிதல் – "ஊகம்"

VI வேண்டாத இடத்தில் சிலவற்றை மறைத்தல் – "அபோஹணம்"

VII பிறர்க்கு எடுத்து போதித்தல் – "போதனை"

VIII மெய்யறிவுபெறுதல் – "தத்துவஞானம்"

இவ்வெண் வகையான ஆற்றலாய் நின்று புத்தியைப் புரந்து எட்டாவதாகிய மெய்யறிவாய் மேல்நிலைப் படுத்தும் திரிபுர சுந்தரியும் அபிராமியே ஆவாள்.

மன நலம் குன்றியவர்களின் (புத்தி ஸ்வாதீனமில்லாதவர்களின்) பொருட்டு இப்பாடலைப் பாராயணம் செய்ய அவர்கள் குணமடைவார்கள். இதுவே இப்பாட்டின் பாராயண பலன் ஆகும்.

# ஒழுங்கும் ஒழுக்கமும்

பேராசிரியர், திரு. மது. ச. விமலானந்தம்

( மலர் 41. இதழ் 9, பக்கம் 432 இன் தொடர்ச்சி )

ஒழுக்கத்தை உயர்த்துவதுதான் ஒவ்வொருடைய நோக்க மாக இருக்க வேண்டும். எவரும் தம்ஒழுக்கத்தைத் தூய்மை யாகவும் துலங்குமாறும் வைத்துக்கொள்ள வேணும் என்கிறார் செஸ்டர்பெளஸ். கருபிடிக்க விடுவதோ மாசுபடிய விட்டு விடுவதோ கூடாது. ஒழுக்கம் என்பது ஓர் ஆடி போல்வது. அது பளிச்சென்று இருக்க வேணும். அப்போதுதான் பிறர் பார்க்க விழைவர்; பார்த்து மகிழவும் முடியும். 'சிறந்த சொல் வீரனாகவும் சீரிய ஒழுக்க முடையோனாகவும் இரு' என நம்மை நோக்கி நவில்கிறார் நெப்போலியன். ஏனெனில் ஒழுக்கம் வைரத்திற்கு ஒப்பாகும்; அஃதொன்றே பிற கற்களாம் செயல் களைவெட்டும் ஆற்றலுடையது. ஒழுக்கத்தூய்மை ஒன்றுதான் உலகப் பேரறிவுகள் அனைத்திலும் உயரியதாக மதிக்கப் பெறுவது என்கிறார் நம் காந்தியடிகள்.

இந்த அன்றாட அவதி வாழ்வில் இச்சைக்கும் ஈர்ப்புக்கும், சுழலுக்கும் சூறுவளிக்கும் இடையே தாக்குப் பிடித்து வாழ்வின் தேய்மானங்களுக் கெல்லாம் ஈடு கொடுத்து வாழ்வது என்பது மிகவும் கடினம். எனவே ஒழுக்கத்தில் உறுதியாக நிற்க வேணும் –நிற்குமாறு கண்ணும் கருத்துமாகக் காத்துப் பேணிப் போற்ற வேண்டும்.

நல்லொழுக்கம் பெற்றாகி விட்டது; இனிப் பெறுதற்கு ஏதுமில்லை என்று அமைதி அடைந்து விடக்கூடாது. இன்னமும் ஏறு நடை போட்டு எண்ணரிய நற்செயல்கள் செய்தற்குரிய வாயிலாக வழித்துறையாக ஒழுக்கத்தைக் கொள்ளவேண்டுமே தவிர அதுவே -முதிர்ச்சியாக – முடிந்த முடிபாகக் கருதி விடலாகாது; வளர்ந்துகொண்டே இருக்க வேண்டும்.

ஒழுக்கம் கனவில் உருவாகாது, கனவால் உண்டாக்கி விடவும் முடியாது. ஆகையால் அமைத்துவிடக் கூடியதுமன்று. உறுதியும் உழைப்பும் இடைவிடாப் பயிற்சியும் முயற்சியுமே பைபப்பைய உருவாக்கும் – உறுதிப்படுத்தும்.

ஒழுக்கம் உருவாகும் உலைக்கூடம் அன்றாட வாழ்வே தவிர, அந்தரத்தில் அமையும் விந்தை உலகோ வேறெதுவோ அல்ல. ஆண்டவன் அருளும் அன்று' அது நம்கையில் உளது. தன்னைத் தான் உயர்த்துவானும் தாழ்த்துவானும் தான்தான். மனித ஆற்றல்கள் தனிமையில் வளர்கின்றன- வளமுறுகின்றன. ஆனால் ஒழுக்கமோ இந்த ஆரவார உலகிடைத்தான் உருவாகிறது.

மாந்தன் சூழ்நிலையால் உருவாக்கப்படுகிறான் என்பது பொருந்தாது. ஒழுக்கமே ஒருமனிதனுக்குச் சூழ்நிலையினின்று ஓர் உயரிய நிலைபேற்றை உண்டாக்கித் தருகின்றது. நம்பலமும் நலமும் பண்பில் தான் உளது; பணத்திலோ பகட்டிலோ இல்லை. இந்த உலகும் ஒழுக்க சீலர்களை ஒட்டியே உருள்கிறது.

'பண்புடையார் பட்டுண்டுலகு' (குறள்)

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' (தொல்காப்பியம்)

'வெள்ளத் தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு' (குறள்)

செயல் பழக்கமாகிறது, பழக்கம் பண்பாகப் பழுக்கிறது, பண்பே விதியாக விளைகிறது.

Sow an act & you will reap a habit
Sow a habit & you will reap a character
Sow a character & you will reap destiny (Bordmair)

நம் குணமே நமக்கு எமனாக அமைகிறது 'தீதும் நன்றும் பிறர் தர வாரா; தான்தர வருமே'(புறம்)எனக்கணியன் பூங்குன்றனார் புகல்வது கருதுக. இதனாற்றான் உலகுபுகழ் சேக்சுபியர் Character is destiny' என்று கூறி எண்ணற்ற நாடகத்தால் இனிதே விளக்கியுள்ளார் விதி யெனத் தனியே எங்கோ இல்லை; நம் ஒழுக்கமே ஊழாக உருப்பெறுகிறது. அதனாற்றான் வள்ளுவர் சொல்கிறார்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (131)

என்று. ஒழுக்கமே சிறப்பும் சீர்மையும் பயக்கும். அத்தகு ஒழுக்கத்தை எத்தகு சிறப்புடன் ஏத்த வேண்டுமெனில் நம் உயிரைவிட உயர்வாகப் போற்ற வேண்டும். ஒழுக்கம் போயின் எல்லாம் போனதாகும். தலையின் இழிந்த முடிக்கு ஒப்பாவர். எனவே எவரும் ஒழுக்க உயர்வினின்றும் இழிதல் கூடாது -கூடவே கூடாது.

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை (1964)

என்பது வள்ளுவர் வாக்கு. மேலை நாட்டவர் ஒருவர் இதனை எப்படி இயம்புகிறார் எண்ணுங்கள்.

If wealth is lost nothing is lost
If health is lost, something is lost
If character is lost, everything is lost

பொன்போற் போற்றவேண்டிய பொன்னுரை ஈது.

ஒழுங்கு காலந் தவறாமையால் காணப்படுவதுபோல, ஒழுக்கம் வாய்மையால் உணரப்பெறும். ஒருவன் ஒழுக்கம் உடையவன் என்பது அவன் பேசும் வாய்மை கொண்டு விளங்கிக்கொள்ளலாம். (குறள் : 298)

இப்படி நாம் ஒழுங்கு-ஒழுக்கம் என இரண்டாகப்பிரித்துப் பிரித்துப் பேசினும். இரண்டும் தனித்த பண்புகள் அல்ல ஒன்றை யொன்று சார்ந்த தழுவிய சால்புகள் (Relative terms) என்றே இயம்பவேண்டும். ஒன்றின்றி ஒன்றில்லை; ஒன்றுக் கொன்று உறுதுணை யானவை - ஊற்றம் அளிப்பவை.

அகம் இன்றிப் புறமில்லை; புறம் அல்லாது அகம் இல்லை. அகம் உயிர்; புறம் உடல். உயிரின்றி உடல் இயங்காது; உடலின்றி உயிர் உருப்பெறாது. உயிருடைமையை உணர்த்துவது உடல்; உடலை இயக்குவது உயிர். உயிரும் மெய்யும் ஒன்றினால்தான் உயிர்மெய்.

அஃதே போன்று ஒழுக்கம் உயிர் போன்றது; ஒழுங்கு உடல் போல்வது. ஒழுக்கத்தின் வெளிப்பாடு ஒழுங்கு; ஒழுங்கின் ஊற்றம் ஒழுக்கம். எனவே ஒழுங்கும் ஒழுக்கமும் ஒன்றை யொன்று கட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். ஒன்றினின்று மற்றொன்று மிளிர்வது, ஒன்றுக்கு இன்னொன்று உறுதுணையாய் அமைவது. இன்னும் சொல்லப் போனால் இரு பண்புகள் என்பதைவிட ஒரு பண்பின் இருபக்கங்கள் - இரண்டு முனைகள் எனலாம்.

உடலின் உயிர் ஆவி; உள்ளத்தின் உயிர் ஒழுக்கம். விதை போன்றது ஒழுக்கம். விதைக்கேற்பவே விருட்சம். விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்கும்? ஒழுங்கு மேலே தெரியும் மரம். ஒழுக்கம் வெளித்தெரியாத மரத்தை நிலைபெறச்செய்யும் வேர் ஆகும்.

ஒழுங்கு ஒழுகலாற்றின் - நடையுடை பாவனையின் கோட்பாடு. ஒழுக்கமோ வாழ்வின் கோட்பாடு. முன்னது விரைந்து வளர்வது - மாறக்கூடியது; பின்னது மெதுவாக மலர்வது, எளிதில் மாருதது. ஒழுங்கு நாம் நண்பர் பகைவர் அயலார் என்றமுத்திறத்த மக்களோடு எப்படிப்பழகுகிருேம் என்பதைப் பொறுத்தது. ஒழுக்கமோ பல்வேறு பாங்குகளைப் பொறுத்தது.

ஆளுமை (Personality) என்பது இந்தஇரண்டின் ஒன்றலில் முறுக்கில் எழுவது. இவ்விரு புரிகளும் இணைந்த கயிறே மனிதம் என்பது. எலும்பும் சதையும் இணைந்த மனித உடல் ஆவதுபோல, ஒழுங்கும் ஒழுக்கமும் ஒன்றியவனே உயர் மாந்தன்-சால்புடைச் சான்ருேன் எனலாம், ஒழுங்கு கரும்பின் நுனி - ஒழுக்கம் அதன் அடிப்பகுதி ஒழுங்கு தொடக்கப்பள்ளி ஒழுக்கம் உன்னதநிலை - ஒரு தவம் ஆகும்.

சிறந்த எண்ணம் சீரிய ஒழுக்கத்தையும், நல்ல நினைவு சிறந்த ஒழுங்கையும் சிந்திக்கும். நாம் என்பது நான்யார் என்பது அழியும் அழகில் இல்லை, அழுகும் உடலில் அல்ல. அழியா ஒ்ழுங்கிலும் ஒழியா ஒழுக்கத்திலுமே உளது.

ஒரு காசு இருக்கிறது; அதன் இருபக்கங்கள் தலை, பூ என்கிருேம். பக்கம் இரண்டாயினும் காசு ஒன்றே. நமக்குக் கண்கள் இரண்டு உண்டு; ஆனல் பார்வை ஒன்றுதானே. காதுகள் இரண்டுதாம் கேள்வி ஒன்றே; கால்கள் இரண்டு, ஆயின் நடை ஒன்றுதான், அஃதேபோல ஒழுங்கும் ஒழுக்கமும் ஒன்றிய ஒன்றே மனிதப் பண்பு. இந்த இருமையும் இணைந்தால்தான் ஒருபெரும் வட்டம் உருவாகும். இன்றேல் அரைகுறைதான். அரைவேக்காடுதான், அரைகிணறு தாண்டலாமா! முழுமாந்தனாக முகிழ்க்கவேணும். அப்போதுதான் மனிதன் தெய்வமாகிருன்; ஆத்மா மகாத்மா-பரமாத்மா ஆகும்.

இந்த இரண்டும் - ஒழுங்கும் ஒழுக்கமும் - மாந்தனுக்கு மாண்புமாட்சி காட்சி எல்லாம் அளிக்கின்றன. இந்த இருகரையினுள்ளேதான் வாழ்க்கையாம் ஆறு பாய்ந்தோடிவருகிறது. இந்த இருதண்டவாளங்களின் மேலேதான் வாழ்வாம் ரயில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஓடவேண்டும். இவ்விரு இணைப் பண்புகளால்தான் - உயர்பண்பின் ஊற்றத்தால்தான் எப்படிப்பட்ட மாந்தனின் ஏற்றமும் தோற்றமும், திறனும் தேற்றமும் உளது. எனவே ஒழுங்கையும் ஒழுக்கத்தையும் இரு கண்களாக - கண்மணிகளாகக் கருதி ஏற்றமுறுவோமாக.

---

# திருமுகப் பாசுரம்

பேராசிரியர், திரு. க. வெள்ளைவாரணனர்

மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம் சார்பில் மதுரை ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் திருக் கோயில் சங்கத்தார் மண்டபத்தில் திருமுகப் பாசுரம் பதிக்கப்பெற்று நிகழ்ந்த திறப்புவிழாவில் இவ்வெளியீடு கையுறையாக வழங்கப்பெற்றது.

செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகராகிய கூடவலம் பதியிலே சங்கப் புலவர்களுடன் தானும் ஒரு புலவராக வீற்றிருந்து தமிழாராய்ந்து 'கொங்கு தேர் வாழ்க்கை' யெனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலையும் அறுபது சூத்திரங்களாலியன்ற இறையனர் களவியலையும் இயற்றியருளிய திருவாலவாயுடையாராகிய சிவபெருமானே, தன்னை இன்னிசையாற் பரவிப் போற்றிய பாணபத்திரர் பொருட்டுப் பாடித் தந்த திருப்பாட்டு 'மதிமலிபுரிசை' எனத் தொடங்கும் திருமுகப் பாசுரமாகும். இது பதினெராந் திருமுறையின் முதற்கண் வைக்கப் பெற்றுளது.

திருவாலவாயென்பது பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையிற் சிவபெருமானுக்கு அமைந்த திருக்கோயிலாகும். எல்லாம்வல்ல இறைவன் இங்கு எழுந்தருளியிருந்து மன்னுயிர்களுக்கு அருள் சுரத்தல் பற்றித் திருவாலவாயுடையார் என்பது இறைவனுக்குரிய பெயராயிற்று. அறிவாற்றல்களில் நிரம்பிய பெரியோர்கள் தம்பால் அன்புடையார்க்கு எழுதியனுப்பும் ஓலை திருமுகம் என வழங்கப்பெறும். தனக்குவமையில்லாத தனி முதல்வனுகிய சிவபெருமான் தன்னை யாழிசையாற் பரவிப் போற்றும் நல்லிசைப் புலவராகிய பாணர்பத்திரர் பொருட்டுத் தன்பால் அன்புடைய தமிழ் வேந்தராகிய சேரமான் பெருமானுக்கு எழுதியருளிய திருமுகமாக இசைநலம் பொருந்த இச் செய்யுள் அமைந்தமையால் இது திருமுகப்பாசுரம் என வழங்கப்பெறுவதாயிற்று. சில ஏடுகளில் இது திருமுகப்பாயிரம் எனவும் குறிக்கப் பெற்றுளது. இவ்வாறு ஒருவர்க்கு ஓலையிற் செய்தியை வரைந்து தெரிவிக்கும் நிலையில் அமைந்த செய்யுட்களை ஓலைத்தூக்கு எனவும் வழங்குதலுண்டு. இக்காலத்தார் இதனைச் சீட்டுக் கவியென வழங்குவர்.

கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமாள் நாயனுர் கொடுங் கோளுராகிய வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சேரநாட்டை ஆட்சிபுரியும் நாளிற், பாண்டி நாட்டின் தலைநகராகிய் மதுரையம் பதியிற் பாணபத்திரனென்னும் பெயருடைய இசைப் பாண ரொருவர் வாழ்ந்திருந்தார். பாண்டிய மன்னனுல் நன்கு மதிக்கப் பெற்ற அவர், மதுரைத் திருவாலவா யிறைவற்கே இசைத் தொண்டு புரியுங் கடமை பூண்டிருந்தார். அரசர் முதலியோரை யணுகாது ஆலவாயண்ணலையே இன்னிசையாற் பரவிப் போற்றும் பாணபத்திரர்க்கு வறுமைநிலை யுண்டாகியது. பாடு வார் பசி தீர்ப்பாராகிய திருவாலவாய்ப் பெருமான் பாணபத் திரரது வறுமைத் துயர்களையத் திருவுளங் கொண்டார். வேண் வார் வேண்டுவதே யீந்தருள் புரியுந்தாமே, எல்லாங் கொடுக்க வல்லராயினும் தம்பாற் பேரன்புடைய சேரமான் பெருமானைக் கொண்டு பாணரது வறுமையைத் தீர்த்து உதவிபுரிய வேண்டு மென்பது ஆலவாயண்ணலது பெருவேட்கை யாயிற்று. இறைவர் பாணபத்திரரது கனவிலே தோன்றி “அன்பனே. என்பால் நிலைபெற்ற பேரன்புடையவன் சேரமான்பெருமாள் என்னும் வேந்தன். அவன் உனக்குப் பொன், பட்டாடை, அணிகலன்கள் முதலாக நீவேண்டியவெல்லாங் குறைவறக் கொடுப்பான். அவனுக்கு ஒரு திருமுகம் எழுதிக்கொடுக்கின் ரேம். நீ அதனைப்பெற்று விரைந்து மலைசென்று பொருள் பெற்றுவருக” என்று கூறி,

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையின் உரிமையின் உதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பால் அன்பன், தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

எனவரும் அழகிய திருப்பாடலை யெழுதிய திருமுகத்தைக் கொடுத்தருளினுர்.

ஆலவாயிறைவன் அருளிய திருமுகத்தைப் பெற்ற பாண பத்திரர், அதனைத் தலை மேற்கொண்டு போற்றி அப்பொழுதே

மலைநாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்; சேரர் தலைநகராகிய கொடுங்கோளூரை அடைந்தார். சேரமான் பெருமாள் அரசு வீற்றிருக்குந் திருமாளிகையின்முன் சென்று வாயில் காவலர்க்கு அறிவித்தார். பரமனையே 'பாடுவாராகிய பாணபத்திரரது வருகையை யறிந்த சேரமான் பெருமாள் விரைந்து சென்று பாணபத்திரரை வரவேற்று வணங்கினார். அடியேனையும் பொருளாக மதித்துத் திருமுகங் கொண்டு தாங்கள் இங்கு எழுந் தருளியது யான்செய்த தவப்பேறாகும் எனக்கூறி அன்போடு அரசவைக்கு அழைத்துச் சென்று இருக்கை நல்கி உபசரித்தார். பாணபத்திரரும் தாம் கொணர்ந்த திருமுகத்தை வேந்தர் பெருமான் கையிற் கொடுத்தார். அத்திருமுகத்தை ஆர்வமுற வாங்கி முடிமேற்கொண்ட சேரர் பெருமாள் ஆனந்தக் கூத்தாடி மொழிகுழறக் கண்ணீர் மல்கிப் பலமுறை நிலமுறப் பணிந்தார். தமக்கு இறைவர் தந்தருளிய திருமுகப் பாசுரத்தை பலமுறை படித்து உளமுருகினார். அதனைப்படியெடுத்துக்கொள்ளும்படிச் செய்தார். இறைவனது திருவருளை நினைந்து மகிழ்ந்து தமது உரிமைச் சுற்றத்தினரையும் அமைச்சரையும் அழைத்துத் தமது நிதியறையிலுள்ள பலவகைப் பொருள்களையும் பொதிசெய்து கொணரும்படிக் கட்டளையிட்டார். அவ்வாறே அவர்களும் நிதி யறையுட்புகுந்து எண்ணிறந்த பெரும் பொருளைப் பொதிசெய்து கொணர்ந்தனர். சேரமான் பெருமாள் பாணபத்திரரை நோக்கி, ' இப்பெரும் பொருளையும் யானை குதிரை முதலிய சேனைகளையும் சேரநாட்டு ஆட்சியுரிமையினையும் தாங்களே ஏற்றருள வேண்டும்' என வேண்டி நின்றார். கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமாளது கொடைத்திறத்தைக் கண்டு வியந்த பாணபத்திரர் சேரமானை நோக்கி, 'வேந்தர் பெருமானே, என்னுடைய சுற்றத்தாரைப் பேணுதற்குப் போது மான பொருள்களை மட்டும் அடியேன் தங்கள்பால் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது திருவாலவாயிறைவரது ஆணை யாகும். ஆதலால் அரசாட்சியுரிமையும் அதற்கு இன்றியமை யாத உறுப்புக்களாகிய படைமுதலிய ஏனைய அங்கங்களு மாகிய இவற்றைத் தாங்களே கைக்கொண்டு அரசுபுரிதல் வேண்டும்' எனக் கூறிச் சேரமான் பெருமாளை வணங்கினார். இறைவரது ஆணையெனப் பாணர் கூறியதனைக் கேட்ட சேரமான் அவ்வாணையை மறுத்தற்கு அஞ்சிப் பத்திரரது வேண்டுகோளுக்கு உடன்பட்டார். பாணபத்திரரும் தமக்கு வேண்டிய பெரும் பொருளையேற்றுக் கொண்டு சேரமான் பால் விடைபெற்று யானைமீதமர்ந்து மதுரை யடைந்து திருவாலவா யிறைவர்க்கு என்றும்போல் இன்னிசைத் திருத்தொண்டு புரிந்து இனிதிருந்தார் என்பது வரலாறு. இது, திருத்தொண்டர் புராணம்

கழறிற்றறிவார் நாயனார் புராணத்தில் 26-முதல் 38 வரையுள்ள செய்யுட்களில் விரித்துக் கூறப் பெற்றுளது.

"திங்கள் தங்கியமதிலாற் சூழப்பட்ட மாடங்களையுடைய கூடல் நகரத்திலே நிலைபெற்ற பால்போலும் வெண்ணிறச் சிறகுகளையுடைய அன்னங்கள் பயின்று வாழும் நீர்நிலையோடு கூடிய சோலை சூழ்ந்த திருவாலவாய் என்னுந் திருக்கோயிலிலே நிலைபெற வீற்றிருக்கும் இறைவனாகிய சிவன்யான். யான் வரைந்த இம்மொழியினையுடைய பெரும் புலவர்களுக்கு அன்புரிமையினால் தன்பாலுள்ள பெரும்பொருளை அவர்கள் போதுமெனமறுக்கவும் உரிமையோடு நிறையக் கொடுத்துப்புகழாகிய ஒளிபரவ நிறந்தங்கிய திங்களை யொத்துக் குளிர்ச்சியை நல்கி விளங்கும் வெண்கொற்றக்குடை நிழற்கீழ்ப் பார்ப்பரிசெலுத்தும் ஆற்றல் மிக்க சேரவேந்தன் காண்பானாக. பக்கத் தாரியல்பு அறிந்து பழகும் இனியபண்பினோடுயாழினை வாசிக்க வல்ல பாணபத்திரனென்பான் சேரமானாகிய தன்னைப்போலவே என்பால் நிறைந்த அன்புடையவன் வேந்தர்பெருமானாகிய நின்னைக் காணவேண்டு மென்னும் பேரார்வத்தால் அங்கு வருகிறான். ஈவோனும் ஏற்போனும் ஆகிய நும்மிருவர் மாண்பினையும் நோக்கி அம்மாண்புக்குத் தக்க பொருளைக் கொடுத்து அவனை என்பால் வரும்படி மீளவிடுதல் நின்னாற் செய்யத்தகுவதாகும்" என்பது இத்திருமுகப் பாசுரத்தின் பொருளாகும்.

பன்னிரண்டடிகளால் இயன்ற நேரிசையாசிரியப்பாவாகிய இப்பாடலில், முதல்நான்கடிகளில் இதனைப்பாடிய புலவர் தலைவனாகிய சிவபெருமானது சிறப்பும், அடுத்துள்ள நான்கடிகளில் அவ்விறைவனாற் பாடப்பெறும் புகழமைந்தபாட்டுடைத் தலைவராகிய சேரமான்பெருமாளது கீர்த்தியும், பின்னுள்ள நான்கடிகளில் இதனைப் பாடுதற்குக் காரணராகிய பாணபத்திரரது அன்புரிமைச் சிறப்பும் அவர்க்கு வேண்டும்பொருளைக் கொடுத்தனுப்புக என்னும் செய்தியும் குறிக்கப்பெற்றிருத்தல் காணலாம்.

இன்ன தன்மையன் என யாவராலும் அறிய முடியாத இறைவன், தன்னை இன்னிசையாற் போற்றிய பாணபத்திரரது வறுமைத்துயரைநீக்கிப்பெருஞ்செல்வம்வழங்குதற்பொருட்டும், தன்னை இடைவிடாது வழிபடும் சேரமான் பெருமாள் என்னும் வேந்தர் பெருமானுடைய வரையா ஈகையினையும் சிவபத்தியினையும் விளக்குதற் பொருட்டும் தண்ணார் தமிழளிக்குந் தண் பாண்டிநாட்டில் மதுரைத் திருவாலவாயிலில்தானும் ஒருதமிழ்ப் புலவனாகத் திருமேனி கொண்டு தோன்றி, 'மதிமலிபுரிசை'

யென்னும் இத்திருமுகப்பாசுரத்தை பாடிக்கொடுத் தருளினன் என்னும் இவ்வரலாறு, அடியார்க்கெளிய பெருமானகிய அம் முதல்வனது அருமையிலெளிய அழகினை இனிது விளக்குவ தாகும். நாடு, மொழிமுதலிய மக்களது உலகியல் வரம்பினுட் படாது எல்லாவுலகங்களுக்கும் எல்லாவுயிர்கட்கும் தலைவனுகத் திகழும் பொதுமை நிலையில் விளங்குதல். இறைவனது இயல் பாகும். எனினும் அம்முதல்வனல் ஆட்கொள்ளப் பெறுதற் குரிய மக்கள், நாடு, மொழி முதலிய எல்லையுட் பட்ட பல்வேறு தொகுதியினராக வாழ்கின்றனர்கள். அவர்களையெல்லாம் ஆட் டருளுதற் பொருட்டு அருளே திருமேனியாகக் கொண்டு எழுந் தருளும் இறைவனும் அவர்களுள் ஒருவனுக அவர்கள் பேசும் மொழியிற் பேசியும் எழுதியும் செய்யுள் முதலியன இயற்றியும் நட்புக் கொண்டு உறவாடி உலக மக்களுக்கு ஞானம் உண்டாக்கி நலம் புரிந்தருள்கின்றான். இவ்வுண்மையினை விளக்கும் சிறந்த திருவருளிலக்கியமாக இத்திருமுகப்பாசுரம் திகழ்கின்றது.

'தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என நம்பியாரூரார்க்கு அடியெடுத்துக் கொடுத்து அடியார் பெருமை யினைக் கூறப்பணித்த சிவபெருமான் இத்திருமுகப் பாசுரத்தால் சேரமான் பெருமாள் நாயனரது பெருமையினை விரித்துக் கூறினமையால் இப்பாசுரத்தாற் போற்றப் பெற்ற பாட்டுடைத் தலைவர் சேரமான் பெருமாள் நாயனரென்பதும், அவரைப் பாடிய புலவர் பெருமான் ஆலவாயில் அவிர்சடைக் கடவு ளென்பதும் நன்கு புலனுதல் காணலாம்.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakadeswaraswami Devasthanam, Tirukkadaiyur.

It was a Great day for one to have a dharsan of Lord Shiva, Mrityunjaya who is protector of all goods and destroyer of evils, who gave Markandeya Immortality.

My respectful pranams to Him and Abirami.

(S-d) BAGHAT JOSHI,
26—8—82. Menister, Govt of India.

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு 18—8—82 அன்று காலே திருநாட்டியத்தான்குடி அருள்மிகு இரத்தினபுரீசுவரர் ஆலயத்திலும் மாலேதிருக்காருயில் அருள்மிகு கண்ணுயிரநாதர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனேகளுடன் மிகச்சிறப்பாக நடைபெற்றது வழிபாட்டின் போது அவ்வத்தலத்திருப்பதிங்கள் பாராயணம் செய்யப் பெற்றன. அச்சிடப் பெற்ற தலத்திருப்பதிகவெளியீடு அன்பர் கட்கு வழங்கப்பெற்றது. காலே திருநாட்டியத்தான்குடித் திருக் கோயிலில் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் கோட்புலி நாயனுர்பற்றியும் ஆதீன அடியவர் நெல்லேயப்ப சுவாமிகள் கலியநாயனுர்பற்றியும் திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ. அவர்கள் தொண்டின் உறுதிபற்றியும் சொற்பொழிவு ஆற்றினர். சப்தவிடங்கத்தலங்களுள் ஒன்ருகிய திருக்காருயில் திருத்தல வழிபாட்டின் போது ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் 'பக்தி' என்பது பற்றியும், ஸ்ரீ நெல்லேயப்ப சுவாமிகள் 'தலபுராணம்' பற்றியும், திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ. 'தலபபதிகம்' பற்றி விளக்கியும் உரையாற்றினர். அன்பர்பலர் வழிபாட்டில் கலந்து கொண்டு பயனுற்றனர்.

## ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீ சுவரர் திருக்கோயிலில் சந்தான குரவருள் மூன்ருமவராகிய ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா 21—8—82 சனிக் கிழமை ஆவணிஉத்திர நாளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலே சந்தானுசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனேகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினுர்கள். மாலே 7 மணியளவில் மெய்கண்டதேவ நாயனுர், அருணந்திசிவாசாரியார் மறைஞானசம்பந்தர், உமா பதிசிவசாரியார் ஆகிய புறச்சந்தானகுரவர்கள் பற்றி முறையே

திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. திரு. சொ. முத்தையா தேசிகர் எம். ஏ. திரு. கா. ம. கண்ணப்பன், பி. லிட்., வித்துவான் திரு. மு. கோவிந்தராசனர் ஆகியோர் விரிவுரை ஆற்றினர்.

அன்று சிதம்பரம் திருக்களாச்சேரி சிங்காரத்தோப்பில் திருவாவடுதுறை அருளாட்சியில் உள்ள ஸ்ரீமறைஞானசம்பந்தர் குருமூர்த்த ஆலயத்திலும் ஸ்ரீ மறைஞானசம்பந்தருக்குத் தருமையாதீனத்தின் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சிறப்பு வழிபாடுகளும் நிகழ்வுற்றன.

## சமபந்தி போஜனம்
## முப்பத்தாறுவது சுதந்திரத்திருநாள்

தருமபுர ஆதீனத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ தருமபுரீசுவரசுவாமி ஸ்ரீ ஞானபுரீவரசுவாமி ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவி ஆலயத்தில் இந்திய நாட்டின் 36 ஆவது சுதந்திரத்திருநாளை முன்னிட்டு 15—8—82 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி அளவில் சாதிசமய பேதமற்ற, ஆதித்திராவிட மக்கள் கலந்துகொண்ட வகையில் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்வுற்றது. இந்திய நாட்டின் ஒருமைப்பாடு. சமய நல்லொழுக்கம், சமுதாய மேம்பாடு வேண்டி இறையருளைப் பிரார்த்தித்து வழிபாடு நிகழ்வுற்றது, தருமையாதீனக் கல்வி நிலைய மாணவர்களும் ஆசிரியர்களும் இப்பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். காலை 8 மணியளவில் ஆதீனக் கல்வி நிலையங்களில் கொடியேற்று விழா நிகழ்வுற்றது. நண்பகல் 1 மணியளவில் தருமையாதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் மயிலாடுதுறை காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. A. I. பரமானந்தம் அவர்கள் முன்னிலையில் சாதிவேறுபாடற்ற சமபந்தி போஜனம் நடைபெற்றது. ஊர்மக்களும் ஆதித்திராவிட மக்களும் விருந்தில் கலந்து கொண்டனர்.

## "கயிலை மாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளுக்கு வரவேற்பு விழா

திருச்செந்திலாண்டவன் திருவருளாலும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசியாலும் திருக்கயிலாய யாத்திரை மேற்கொண்டு திருக்கயிலாய நாதரைத் தரிசித்து, குருதரிசனம் செய்யும் பொருட்டு, திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் தருமைக்கு எழுந்தருளியபோது (16—8—82) அன்று

தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் பிற்பகல் 3 மணியளவில் வரவேற்பு விழா நிகழ்வுற்றது தருமையாதீனம் ஸ்ரீ சொக்கநாதர் பூசைமடத்தில் காலை வழிபாட்டின்போது ஸ்ரீமத் சுவாமிகளுக்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் 'கயிலைமா முனிவர்' என்ற பட்டம் அளித்து ஆசியருளினர்கள். பிற்பகல் வரவேற்பு விழா ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருமுன்னிலையில் நிகழ்வுற்றது. ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் வரவேற்பு இதழ் படித்தளிக்கப் பெற்றது. ஸ்ரீமத். சுவாமிகள் தம் அருளனுபவ உரையில் யாத்திரைகளால் ஏற்படும் மன இயல், உடல்இயல், தொடர்பான நன்மைகள் பற்றியும், யாத்திரிகள் மனிதனுக்குக் கற்பிக்கும் ஒழுக்க நெறிகள் பற்றியும் விளக்கி எந்தஒரு செயலும் திருவருளும் குருவருளும் துணையாகக் கொண்டு செய்யப் பட வேண்டும் என உரைத்தருளினர்கள். மாயூரம் நகரப்பெரு மக்கள் பலரும் வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## தருமையாதீனத்தில் ஆவணிமூலப் பெருவிழா

தருமையாதீனத்தில் 27, 28, 29—8—82 ஆகிய மூன்று நாட்களிலும் ஆவணிமூலப் பெருவிழாவும், ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. விழா நாட்களில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்களின் ஆன்மார்த்த மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பான முறையில் நடைபெற்றன.

29—8—82 ஞாயிற்றுக் கிழமை ஆவணிமூலத் திருநாளன்று காலை ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ வழிபாடு நிகழ்வுற்றது. விழாமலராகச் 'சிவஞான போதம்' வெளியிடப் பெற்றது.

இந்நாளில் ஆண்டுதோறும் அறிஞர் ஒருவருக்குச் சிறப்புப் பட்டமளித்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியருள்வார்கள். இவ்வாண்டு வரை 32 அறிஞர்கள் பட்டம்பெற்றுள்ளார்கள். இம்முறையில் ஆவணிமூல நன்னாள் மாலை வழிபாட்டின்போது டாக்டர் திரு. ப. அருணசலம் அவர்களுக்குச் '*சித்தாந்தக் கலாநிதி*' என்ற பட்டமளித்துப் பொன்னாடை போர்த்தி ஆசி வழங்கினர்கள்.

ஆவணிமூல விழாவை ஒட்டி மூன்று நாட்கள் தருமை யாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் நிகழ்வுற்றது.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்பள்ளி ஆண்டுவிழா 27—8—82 வெள்ளியன்று மாலை 3 மணியளவில் சாத்திரத் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர்கள் வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ. வித்துவான் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ. வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ. ஆகியோர் முறையே சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் பற்றி விரிவுரை ஆற்றினர். ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

தருமையாதீனத் தேவாரப்பாடசாலை, வேதசிவாகம பாட சாலை ஆண்டுவிழா 28—8—82 சனிக்கிழமையன்று பிற்பகல் 3 மணியளவில் தோத்திரத்திருநாளாகக் கொண்டாடப்பெற்றது அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆராய்ச்சித்துறை, மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் 'மூவர் தமிழ்' பற்றியும் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. 'திருவாசகம்' பற்றியும், தருமை யாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. 'திருத்தொண்டர் புராணம்' பற்றியும் விரிவுரை யாற்றினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நிகழ்வுற்றன.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, சைவ சித்தாந்தக் கல்லூரி ஆண்டுவிழா 29—8—82 ஞாயிறு அன்று மாலை 7 மணி யளவில் புராணத் திருநாளாகக் கொண்டாடப்பெற்றது. இறை வணக்கத்தின்பின் ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு அறிக்கைகள் படிக்கப் பெற்றன. அடுத்து தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஆசியுடன் கல்வி நிலைய மாணவ மாணவிகட்குச் சித்தாந்தக் கலாநிதி டாக்டர் திரு. ப. அருணசலம் அவர்கள் பரிசு வழங்கினர்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்கியருளினர்கள். டாக்டர் திரு. சோ, சிங்கார வேலன் எம். ஏ., பி. எச்டி. அவர்கள் 'திருவிளையாடற்புராணம்' பற்றியும், காஞ்சிபுரம், சித்தாந்தக் கலைச்செல்வர் திரு. க. வச்சிரவேல் முதலியார் 'கந்தபுராணம்' பற்றியும், விரிவுரை

ஆற்றினார்கள். சென்னை சித்தாந்தப் புலவர்மணி திரு. ந. ரா முருகவேள் எம். ஏ. எம். ஓ. எல். அவர்கள் சித்தாந்தக்கலாநிதி பட்டம் வழங்கப்பெற்ற டாக்டர் திரு. ப. அருணாசலம் அவர்களைப் பாராட்டி உரையாற்றினார். சித்தாந்தக் கலாநிதி டாக்டர் திரு. ப. அருணாசலம் அவர்கள் சிறப்புரையாற்றித் தம் நன்றிப் பெருக்கைத் தெரிவித்தார் விழாவிற்கு அறிஞர் பெருமக்களும் மயிலாடுதுறை நகர அன்பர்களும் வந்திருந்தனர். இறைவழிபாட்டுடன் விழா இனிது நிறைவுற்றது.

## மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம் சார்பில்

## திருமுகப் பாசுரக் கல்வெட்டுத் திறப்பு விழா

மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம் சார்பில் பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் பொருளுதவியால் உருவான திருமுகப்பாசுரக் கல்வெட்டுப்படிமத் திறப்புவிழா, மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரர் கோயில் சங்கத்தார் மண்டபத்தில் நிகழ்ந்தது. 4—9—82 நிகழ்ந்த இத்திறப்பு விழாவிற்கு அறநிலைய துணையர் திரு. சண்முக சிகாமணி I. A. S. தலைமை தாங்கினார். மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கு. ஆளுடையபிள்ளை I. A. S. முன்னிலையில், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் இராம. வீரப்பன் வாழ்த்துரையோடு, பழநி அறங்காவல் குழுத்தலைவர் திருமதி. இராதா தியாகராஜன் திறந்து வைத்தார்கள். மதுரைக் கோயில் அறங்காவல் குழுத்தலைவர் V. N. சிதம்பரம் வரவேற்று விழா ஏற்பாடுகளைச் சிறப்புடன் செய்திருந்தார்கள்.

பணிமன்றம் சார்பில் வழங்கப்பட்ட திருமுகப் பாசுரக் கல்வெட்டினை அமைச்சர் பாராட்டி உரை நிகழ்த்தினார். பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் திருமுகப் பாசுரப் பாடலை விளக்கிப் பேசி அனைவர்க்கும் நன்றி கூறினார். மன்ற அமைப்பாளர் வித்துவான் தா. குருசாமி தேசிகர் தேவஸ்தானம் சார்பில் வெளியிடப்பட்ட ( திருமுகப் பாசுரக் கல்வெட்டினை ) விளக்க அறிக்கையினை அனைவர்க்கும் வழங்கி தேவஸ்தான நிர்வாகிகட்கு நன்றி நவில விழா நிறைவுற்றது.

# எதிர்காலம்

**ஜோதிஷம் திரு. A இராசமாணிக்கம்**

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துந்துபிஸு புரட்டாசிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—9—1982 முதல் 17—10—1982 முடிய)

| | | | |
|---|---|---|---|
| | | | ரா |
| | இராசி | | |
| | | | சு சந் |
| கே | ல/ செ | கு | சூ பு சனி |

| | | | |
|---|---|---|---|
| செ கு | | | |
| ராகு பு | அம்ஸம் | | ல/ |
| சூ | | | சனி கே. |
| | சந் | | சு |

ஸ்ரீ துந்துபிஸு புரட்டாசிமீ 1உ சுக்கிரவாரம் பூர நக்ஷத்திரம் நாகவ காணம் கூடிய காலத்தில் சூரிய உதயம்முதல் 10 நாழிகை 16 விஞடிக்கு விருச்சிக லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் லோகத்தில் சகல பிரஜைகளும் புத்திதீட்சண்யத்துடன் விளங்க அனுக்கிரகித்து சிம்மராசியிலிருந்து கன்னியாராசி சங்கிரமணமாக புரட்டாசி மாதம் பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று ஷடசீதி புண்ணிய காலமாகும். சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனுவது லோகில் எங்கும் சுபிட்ச மழை பெய்து பூமியில் வளம் மிகுந்து பயிர்கள் செழித்து விளைவுகள் அதிகரிக்கும். லோகத்தில் கலைஞர்கள் விஞ்ஞான அறிஞர்களால் புதுமை கண்டுபிடிப்புகள் அமைப்புகள் ஏற்பட்டு ஜனங்களின் அனுபோகத்திற்குவரும். தேசங்களில் எங்கும் ஆன்ருேர்களால் சிவ புண்ணிய கைங்கர்யங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். தேசங்களில் ஆளுநர்கள் செங்கோல் ஆட்சி புரிந்து பிரஜைகளை இரட்சிப்பார்கள். எல்லா பிரஜைகளும் ஜீவனேபாயங்களில் நல் உழைப்புடன் பொருளீட்டி நேர்மையுடன் வாழ்க்கை நடத்துவர்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பூர்வ புண்ணியத்தினுல் ஈசனருளில் சிவபரம் பொருளை பூசிக்கும் பாக்கியத்தில் வந்து சிவராஜ யோகத்தில் திரு வீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் குருமகா சந்நிதானங்கள் திருவாய் மலர்ந்து லோகத்திற்கு அறவுரைகள் இயம்பி அருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் நியம விதிளிகன்படி நடைபெற்று வரும். பிரஜைகள் சிவாலயம் சென்று தெய்வ வழிபாடு செய்து இறைவனருள் பெற்றுய்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – $\frac{1}{4}$
( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பெருமதிப்பில் பணவருமானம் வரும். சகோதரர் விசுவாசம் ஒத்துழைப்பு பலம்தரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். முயற்சித்த எல்லா காரியங்களும் வெற்றிகரமாக நடக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் போற்றப் படுதல் அரசாங்க நன்மதிப்பு ஏற்படுதல் ஆகும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் தான தர்மத்துடன் நடந்துக் கொண்டிருக்கும். செப்டம்பர் 18, 19, 20, 21, 28, 29, 30 அக்டோபர் 1, 4, 5, 6, 9, 10, 15, 16, 17 தேதிகளில் தனுதாயம், காரியசாதனை, பிரபலம் ஆகிய நற்பலன்கள் ஏற்படும். செப்டம்பர் 22, 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ – உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$
( இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானம் வரும். செப்டம்பர் 21உ ஆனுல் கணிசமாக ஓர் பொருள்வரும். முன் ஒப்பந்தம் தீர்ந்து புதியன ஏற்படும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்து வரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மேன்மை ஸ்திதியை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். செப்டம்பர் 20, 21, 22, 23, 24, 30 அக்டோபர் 1, 2, 3, 7, 8, 11, 12, 17 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். செப்டம்பர் 25, 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ – திருவாதிரை – புனர்பூசம் $\frac{3}{4}$
( கா. கி. - கு. க. ஸ. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் சுபம் தரும். தனுதி சௌகரியங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். நல்ல ஆபரண பிராப்தியை

தரும். வீடு வாகனங்களில் நவீனம் பொருந்தும் சுற்றத்தார் வருகை, விருந்து உபசாரம், களிப்புறும் சம்பவங்கள் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நல்லன ஏற்பட்டுக் கொண்டிருக்கும். செப்டம்பர் 17, 22, 23, 24, 25, 26, 30 அக்டோபர் 2, 3, 4, 5, 6, 9, 10, 13, 14 தேதிகளில் தனதாயம் நல்ல சௌகரியம், கௌரவம் தரும். செப்டம்பர் 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம்பலன் தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானம் பெருமதிப்பாக வந்துக் கொண்டிருக்கும். நவரத்தின பூஷணம் தரும். செப்டம்பர் 26வ யளவில் எழுத்து மூலத்தில் வித்தியையில் நல்ல சம்பவங்கள் நன் மதிப்பு ஏற்படுதல் ஆகும். பக்திமேலிடுதல் தெய்வஸ்தலம் செல்லுதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 18, 19, 25, 26, 27, 28, 29 அக்டோபர் 4, 5, 6, 7, 8, 11, 12, 15, 16, 17 தேதிகளில் தனவரவு, இஷ்டசித்தி, தெய்வசிந்தனை, நல் விஷய உரையாடல் ஆகிய நற்பலன்கள் ஆகும். செப்டம்பர் 30 அக்டோபர் 1 இத் தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும் வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரசித்தம் தரும். சகோதரருக்கு நன்மைகளை ஏற்படுத்தி வரும். ஜீவனோபாயத் தொழில் துறைகளில் மேன்மை ஸ்திதியை ஏற்படுத்தி வரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 17, 20, 21, 28, 29, 30 அக்டோபர் 1, 7, 8, 9, 10, 13, 14, 17 இத் தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். அக்டோபர் 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாகநடக்கும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பணவருமானத்தை ஏற்படுத்தும். இல்லத்தில் குதுகல சம்பவங்கள் ஏற்படும். சகோதரர் விசுவாசம் ஒத்துழைப்புபலம்தரும். வாகனசுகம் திருப்தியளிக்கும். தக்கோர்

சமுகத்தில் பெருமதிப்பை ஏற்படுத்திக்கொண்டிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செப்டம்பர் 18, 19, 22, 23, 24, 30 அக்டோபர் 1, 2, 9, 10, 11, 12, 15, 16, இத்தேதிகளில் தனுதாயம் நல்ல தீர்மானம் செய்தல் மகிழ்ச்சி ஏற்படுதல் ஆகும். அக்டோபர் 4, 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்தீமமலன்தரும்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾
(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் கெடியாக பணவருமானம் வந்துக்கொண்டிருக்கும். பல விதத்தில் செலவும் ஆகும். துரித மொழியால் அந்தரங்கம் வெளிபட்டு காரிய தடைகள் ஏற்படும். உடன் நியாய போக்கில் சரிபடும். வித்தியாவியாபாராகளில் விளம்பரம் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செப்டம்பர் 17, 20, 21, 25, 26 அக்டோபர் 2, 3, 5, 11, 12, 13, 14. தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். அக்டோபர் 6, 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.
(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுமார்பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் 4 விதங்களில் பணவருமானம் வரும். தர்மநெறியில் சுப செலவுகளும் ஆகும். சகோதரருக்கு நல்லன ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் பிரபல அந்தஸ்து ஏற்படும். எல்லா காரியங்களையும் மிடுக்காகவே நடத்திக் கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். செப்டம்பர் 17, 18, 19, 22, 23, 24, 28, 29 அக்டோபர் 4, 5, 6, 7, 8, 13, 14, 15, 16 தேதிகளிள் தனுதாயம் அந்தஸ்து மேலிடுதல் ஆகிய நற்பலன்தரும். அக்டோபர் 9, 10 தேதிகள் சந்திராஷடமம். மற்றதேதிகளில்மத்திம பலன்தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼
(யே, யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே)

தனுர்ராசி 9 பாதக்களும் சுப பலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் கௌரவத்திற்கு ஏற்பவந்துசேரும். நல்ல வாய்ப்புகள் ஏற்படும். வீடு வாகனங்களில் நல்ல அனுபோகம் தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். செப்டம்பர் 18, 19, 20, 21, 25, 26, 30 அக்டோபர் 1, 7, 8, 9, 10, 15, 16, 17 இத்தேதிகளில் தனுதாயம் பிரபலஸ்தர் நட்புகாரியானு

கூலம் ஆகிய நற்பலன்களையளிக்கும். அக்டோபர் 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேகளில் மத்திமபலன் தரும்.

**10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½**
**( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )**

மகாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தில் அனைத்து பிரச்சனைகளையும் சரிகட்டுவதற்கு பணம் வந்து சேரும். சகோதரர், பந்து அம்மான்கள் விசுவாச பான் கையில் ஒத்துழைப்பு தருவர். பூமியில் இயந்திரங்களில் விருத்தி ஏற்படும். எல்லாகாரியங்களிலும் அனுகூலம் தரும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். செப்டம்பர் 20, 21, 22, 23, 24, 28 29 அக்டோபர் 2, 3, 9, 10, 11, 12, 17 தேதிகளில் தனுதாயம்காரிய ஜெயம், மதிப்புஉயர்தல்ஏற்படும். அக்டோபர் 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾**
**( கு. கே, - கோ. ஸ. ஸி. ஸூ. - ஸே. ஸோ. தா. )**

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் தனவருமானங்கள் வெகுவாக வரும். சகோதரர் விசுவாசம் ஒத்துழைப்பு பலம் தரும். நல்லோர் பிரபலஸ்தர்கள் நேசம் தரும். செல்வாக்கு ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 17, 22, 23, 24, 25, 26, 30 அக்டோபர் 1, 4, 5, 6. 11, 12, 13, 14 தேதிகளில் தனுதாயாம் நற்பலன்களையளிக்கும். செப்டம்பர் 18, 19 அக்டோபர் 15 16 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.**
**( தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )**

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் மிடுக்கான தோரணைக்கு ஏற்ப வருவதாகும். வித்துவத்துறைகளில் வாய்ப்புகளில் தாமத நிலைமையும் சீரானசன்மானமும் ஏற்படுதல் ஆகும். பொது நல மாகவே எல்லா காரியங்களையும் செயல் படுத்திக் கொண் டிருக்கும் மனைவிக்கு சிரோபாதை நலிவு ஏற்பட்டு உடன் குணமாகும். புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். செப்டம்பர் 17, 18, 19 , 25, 26, 27, 28, 29 அக்டேரபர் 2, 3, 7, 8. 13, 14, 15, 16 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும், செப்டம்பர் 20, 21 அக்டோபர் 17 இத்தேகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

# புரட்டாசி மாதச் சிறப்பு நாட்கள்

17—9—82 வெள்ளி, ஷடசீதிபுண்ணியகாலம், திருவையாறு மாதப் பிறப்புதீர்த்தம். மஹாளய அமாவாசை கண்யாரவி 10-16

27—9—82 திங்கள், ஏனாதிநாத நாயனர் குருபூஜை.

30—9—82 வியாழன், பிரதோஷம், நரசிங்கமுனையரையர் நாயனர் -

1—10—82 வெள்ளி, ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் [குருபூஜை.

2—10—82 சனி, பௌர்ணமி விரதபூஜை, நிறைபணி, மாதபூஜை யில் அபூபம் சாத்துதல், வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருபுவனம், திருவையாறு, திருவாரூர் முதலிய தலங் களில் நிறைபணி.

4—10—82 திங்கள், உருத்திரபசுபதி நாயனர் குருபூஜை

5—10—82 செவ்வாய், இன்றுமுதல் வேளூர், திருக்கடவூர் ஆகிய தலங்களில் மூன்றுதினங்கள் சூரியபூஜை.

6—10—82 புதன், வேளூர்க் கிருத்திகை, தருமை ஸ்ரீ சண்முகர் கிருத் திகை அபிஷேகம், விரதம். சங்கடஹரசதுர்த்தி.

7—10—82 வியாழன், திருநாளைப்போவார் குருபூஜை.

9—10—82 சனி, காளாஷ்டமி.

12—10—82 செவ்வாய், ஆயில்யவிழா, திருக்கடவூர் முனீசுவரபூஜை. தருமை 4ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீமாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை.

14—10—82 வியாழன், பிரதோஷம், அருணந்தி சிவாசாரியார் -

15—10—82 வெள்ளி, மாதசிவராத்திரி. [குருபூஜை.

16—10—82 சனி, சர்வ அமாவாசை.

17—10—82 ஞாயிறு, ஆலய நவராத்திரி ஆரம்பம், தருமையாதீனம் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு நவராத்திரி உற்சவ சண்டீஹோம பூர்வாங்கங்கள். வேளூர், சீகாழி, திருக் கடவூர், திருவையாறு முதலிய தலங்களில் நவராத்திரி யில் பிரதிதினம் அம்பாளுக்கு லக்ஷார்ச்சனை நடைபெறும். துலாவிஷு புண்ணியகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம்.

---

# சிறப்பு வகைக் கீரைகள்

தாளி முருங்கைத் தழைதூதுணம் பசலை
வாளிலறு கீரையுநெய் வார்த்துண்ணி — லாளியென
விஞ்சுவார் போகத்தில் வீம்புரைத்த பெண்களெலாங்
கெஞ்சுவார் பின்வாங்கிக் கேள்.

நறுந்தாளி - நன்முருங்கை. தூதுணம் - பசலை. அறுகீரை. இவற்றை புளிநீக்கி பாகஞ்செய்து அன்னத்துடன் நெய்சேர்த்து ஒரு மண்டலம் அளவாக உண்ணில் புணர்ச்சியில்நிர்வாகமும், ஆண்மை யும் உண்டாம். (குணபாடம்,)

Printed & Published by V. Ramaiah Pillai. Managar, Dharmapuram
at the Gnanasambandam Press Dharmapuram, Mayuram. 10-9-82